# தனேஸ்வர நாடகம்

பதிப்பு
க.அமரேசன்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
ஜூன் - 2008

# தனேஸ்வர நாடகம்

சுவடியியலும் பதிப்பியலும் என்னும்
பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்படும் பதிப்பேடு

பதிப்பு
**க.அமரேசன்**

நெறியாளர்
**வீ.அரசு**
பேராசிரியர் - துறைத்தலைவர்

**தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக்கழகம்**
**சென்னை - 600 005.**

**ஜூன் - 2008**

"சுவடியியலும் பதிப்பியலும்" என்னும்
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

எண்: 53010719

# நெறியாளர் சான்றிதழ்

பேரா. வீ.அரசு,
தலைவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் "சுவடியியலும் பதிப்பியலும்" என்னும் பட்டயப்பேற்றிற்காக 'தனேஸ்வர நாடகம்' என்னும் தலைப்பிலான சுவடியை க.அமரேசன் அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பித்தார் என்றும், இந்த ஆய்வேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கின்றேன்.

நெறியாளர்,

(முனைவர் வீ.அரசு)

நாள்: - -2008
இடம்: சென்னை-5.

# பதிப்பாளர் உறுதிமொழி

க.அமரேசன்
முதுகலை இரண்டாமாண்டு
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சுவடியியலும் பதிப்பியலும் என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறைக்கு அளிக்கப்பெறும் 'தனேஸ்வர நாடகம்' என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கின்றேன்.

பதிப்பாளர்

(க.அமரேசன்)

நாள்: - - 2008
இடம்: சென்னை-5.

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பதிப்புரை | 11 |
| 2. | நன்றியுரை | 23 |
| 3. | ஆசிரியர் உரை | 25 |
| 4. | தனேஸ்வர சரித்திரச் சுருக்கம் | 26 |
| 5. | தனேஸ்வர நாடகம் | 31 |
| 6. | பின்னிணைப்பு | 130 |
| | (i) அருஞ்சொற்பொருள்கள் | |
| | (ii) பாடற் முதற்குறிப்பகராதி | |

# பதிப்புரை

தமிழரின் கலைசார்ந்த வடிவங்களுள் நாடகம் என்பதும் அடங்குகிறது. எல்லாக் கலை வடிவங்கள் போலவே நாடகக் கூறுகளும் இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியங்களில் நாடகமானது தமிழர் பண்பாடுகள் சார்ந்த மரபும், வடமொழி பண்பாடுகள் சார்ந்த மரபும் கலந்தக் குறிப்புகளாகக் கிடைக்கின்றன. இலக்கியங்களில் நாடகம் என்ற சொல் குறிப்பிடப்பட்டிருப்பினும் அது வெவ்வேறு பொருள்களைத் தருவதாக உள்ளது.

தமிழர்களின் நாடகம் என்பது இசை வடிவிலான பாடல்களின் ஊடாக நிகழ்த்தப்படுவது. மேலைநாட்டு என்று சொல்லக் கூடியது உரையாடல் மூலம் நிகழ்த்தப்படுவதாகும். தமிழர் நாடக மரபு உள்ளிட்ட அனைத்து நாடக மரபும் இன்பியல், துன்பியல் சார்ந்து அமைகின்றன. நிகழ்த்தப்பட்டு வருகின்ற நாடகங்கள் ஏட்டிலும் எழுதப்பட்டு வாசித்தல் சார்ந்தும் அமைகிறது.

கு.சா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தமிழர் நாடக கால வகைமையைப் பின்வருமாறு பகுக்கிறார்.

(i) அகத்தியம் முதல் சிலப்பதிகாரம் வரை உள்ள கால கட்டத்தை நாடகக் கலையின் முதற்காலமாகவும்,

(ii) நொண்டி நாடகம், பள்ளு நாடகம், குறவஞ்சி நாடகம், பாவைக் கூத்து, தெருக்கூத்து முதலிய காலகட்டத்தை நாடகக் கலையின் இடைக்காலமாகவும்,

(iii) சுந்தரம் பிள்ளையின் மனோன்மணியம், பரிதிமாற் கலைஞரின் மானவிஜயம், கலாவதி, ரூபாவதி, கோபால கிருஷ்ண பாரதியின் நந்தனார், அருணாசலக் கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனை, சங்கரதாஸ் சுவாமிகளின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகங்கள், சதாவதனம் கிருஷ்ணசாமி பாவலர் முதல் இன்று வரை உள்ள மறுமலர்ச்சி நாடகக் கலையின் காலகட்டத்தைத் தற்காலமாகவும் கொள்ளலாம் என்கின்றார்.

தமிழர் இலக்கிய வரலாற்றில் நமக்கு முதன் முதல் கிடைத்த இலக்கண நூலானத் தொல்காப்பியத்தில் நாடகம் என்ற சொல் உலக வாழ்க்கையைப் படைப்பாக்கமாக்க உதவுவதே நாடக வழக்கு என்று நச்சினார்க்கினியர் தனது தொல்காப்பிய உரையில் கூறுகின்றார். மேலும் இதனைப் புனைந்துரை என்கிறார்.

*"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்*
*பாடல் சான்ற புலனெறி வழக்கம்."*

சிலப்பதிகாரத்தில் 'நாடக மேத்தும் நாடகக் கணிகை' என்று இளங்கோவடிகள் மாதவியை அறிமுகம்

செய்கிறார். திவாகரம் எனும் நூல் 'நடமே நாடகம் கண்ணுள் நட்டம்' என்கிறது. சங்க இலக்கியப் புறனானூற்றில்,

*"புய்த்தெறிக் கரும்பின் விடுகளைத் தாமரைப்*
*பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்தர்*
*ஆடுகளம் கடுக்கும் அகநாட்டையே"*

இங்கு கூத்து நிகழ்ந்து முடிந்த இடத்தினைச் சுட்டப்பட்டுள்ளது. இதன் இடவரைவு நாடக அரங்கின் மேடையின் குறியீட்டுத் தன்மையில் இருக்கிறது. மேலும் பெரும்பாணாற்றுப்படையில்,

*"நாடக மகளிர் ஆடுகளத்து எடுத்த*
*வீசி வீங்கு இன்னியம் கடுப்ப"*

என்று நாடகம் நிகழ்த்தும் பெண்களைச் சுட்டுகின்றது. பல்லவர் காலத்தில் பகவத் வஜ்ஜியம், மக்தவிலாச பிரகடனம் ஆகிய நாடக நூல்கள் கிடைக்கின்றன. வடமொழி நூல்களான அர்த்த சாஸ்திரம், நாட்டிய சாஸ்திரம் ஆகியவையும் நாடகப் பிரதியாகும்.

## கி.பி.17, 18 - ஆம் நூற்றாண்டு

கி.பி. 17,18-ஆம் நூற்றாண்டுகளில் நொண்டி நாடகம், குறவஞ்சி, பள்ளு போன்ற இலக்கியங்களுள் நாடகக் கூறுகள் கிடைக்கின்றன. குறவஞ்சி நாடகங்களில் பாத்திரங்கள் நாடகத்தில் நிகழ்வனப் போன்றுத்

தன்னைத் தானே அறிமுகம் செய்து கொள்ளும் முறையில் அமைந்திருக்கும். இடையிடையில் வசனங்கள் இடம்பெறும். பள்ளு இலக்கியங்களும் வசன நடையில் இருக்கும்.

*"ஐயா பராக்குப் பராக்கும்மைக்*
*கும்பிட்டேன் ஆண்டே - உம்மை*
*அல்லவோ தேடி அடியாளிங்*
*கேவந்தேன் ஆண்டே"*

என்று வசன நடையின் கூறுகள் முக்கூடற்பள்ளுவில் காண முடிகின்றது.

அடுத்ததாக இசை நாடகங்கள் தெருக்கூத்து, கீர்த்தனை நாடகம், சங்கரதாஸ் சுவாமிகளின் ஸ்பெஷல் நாடகம், வாசாப்பு நாடகங்கள், பம்மல் சம்பந்த முதலியாரின் மேலை நாட்டுக் கூறுகளை உள்வாங்கிய நாடகங்கள். ஒட்ட நாடகங்கள் என்பவை வசனங்களுடன் கூடியவையாம்.

மேலும் கூத்தானது மகாபாரதக் கதைகளையும், இராமாயணக் கதைகளையும் அவற்றில் உள்ளக் கிளைகதைகளையும் உள்வாங்கி நிகழ்த்தப்படுகின்றது. பாடல்கள், வசனங்கள் இடம் பெறும் காத்தவராயன் கதை, மதுரை வீரன் கதை போன்றவைகளும் நாடக பாணியில் நிகழ்த்தப்படுகிறது. இவ்வாறாக நாடகம் என்பது பல்வேறு படிநிலைகளைத் தாண்டி வந்துள்ளது.

இன்றளவில் மேற்கத்திய உரைநடை நாடகங்களின் தாக்கமே அதிகம். ஷேக்ஸ்பியரின் மேக்பத் கிளியோபாத்ரா, ஹாம்லெட் உள்ளிட்ட பல நாடகங்கள் தமிழில் அறிமுகம் செய்யப்பட்டு நடத்தப்பட்டன.

**தற்கால நாடகங்கள்**

(i) கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இறுதி காலகட்டம் தொடங்கி இன்றுவரை சமூக சீர்கேடுகளைக் களையும் நோக்கில் நாடகங்கள் உருவாகின்றன. மனோஹரா, இரண்டு நண்பர்கள், சாரங்கதாரா, விக்ரம ஊர்வசி ஆகியவை பம்மல் சம்பந்த முதலியார் எழுதியவை. இயக்கம் சார்ந்த நாடகங்களும் உருவாக்கப்பட்டு நிகழ்த்திப் பின் திரைப்படங்கள் ஆகின. திராவிட இயக்கம் சார்ந்து பராசக்தி, மனோகரா, நீதிதேவன் மயக்கம் போன்றவை உருவாக்கப்பட்டது. மேலும் பொதுவுடை இயக்கங்கள் வீதி நாடகங்களை மக்களிடையே நிகழ்த்திவருகின்றன. பெண்ணிய, தலித்திய நாடகங்களும் நிகழ்த்தப்படுகின்றன.

(ii) மேலும் நவீனத் தன்மையுடன், தனிநபர் நடிப்பது, வசனம் இல்லாமல் நடிப்பது, தொழில்நுட்பக் கருவிகள் கதையைச் சொல்வது என்ற அளவிற்கு மாற்றம் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறாகத் தமிழர் நாடகம் என்பது தொல்காப்பியம், சங்க இலக்கியம் தொட்டு பல்வேறு கால கட்டங்களைக் கடந்து புதியக் கோட்பாடுகளை உள்வாங்கி தனது வரலாற்றை விரிவுபடுத்தியும், நீண்ட மரபைக் கொண்டதாகவும் இருந்து வருகின்றது. தமிழர் நாடக மரபில் வடமொழி, ஐரோப்பிய மரபு முக்கியப் பங்கு வகிக்கின்றது. தமிழ்த் திரைப்படங்களும் தொடக்க நிலையில் நாடக வடிவில் அமைந்தன. வசனங்கள் மிக முக்கிய இடம் வகித்தன. இந்த நாடக வரலாற்றுப் பின் புலத்தில் பரந்த விளக்கங்களோடு தெளிவான மன நிலையில் 'தனேஸ்வர நாடகம்' என்னும் இப்பிரதியுள் நுழைவது பொருத்தமாகும்.

### தனேஸ்வர நாடகம்

### தோற்றப் பின்புலம்

தனேஸ்வர நாடகமென்னும் இந்நாடகம், நாடகமாக எழுதும் முன்பு திரு.பிரம்மஸ்ரீ நரசிம்ம பாகவதர் அவர்கள் கதாகாலட்சேபமாகக் கூறிவந்துள்ளார். அதன் பின்னரே திரு.திருநாவுக்கரசு பிள்ளை அவர்கள் நாடகப் பிரதியாக எழுதி உள்ளார். இதை அவரே நாடகத்தின் தொடக்கத்தில் தோற்றப் பின்புலமாகக் கூறுகின்றார். இவ்வாசிரியர் பற்றி வேறு செய்திகள் கிடைக்கவில்லை. இவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர் என்பதைப் பிரதியைக் கொண்டும், பாத்திரங்களின் தன்மைகளைக் கொண்டும் அறிய முடிகிறது.

## தலைப்பு

இந்நாடகத் தலைப்பிற்குக் காரணம் சிவனின் பெயர் தனேஸ்வரன்; இந்நாடகத்தில் வரும் அரசனின் பெயர் தனேஸ்வரன்; அவன் ஆளுகின்ற ஊரின் பெயரும் 'தனேஸ்வரம்'; இவைகளைக் கொண்டே இந்நாடகத்திற்குத் தனேஸ்வர நாடகமென்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

## நாடக நோக்கம்

பூமியில் உள்ள மக்கள் அனைவரும் பேராசையை விட்டு கடவுளின் மேல் பக்திக் கொண்டு முக்தி பெறவேண்டும் என்பதாம். இது இந்நாடகத்தின் கருவாகவும், நோக்கமாகவும் அமைகின்றது. இந்த பூமியில் மக்கள் அதிகப்படியானப் பிள்ளைகளைப் பெற்றும், அவர்களுக்காகப் பொருள் தேடும்பொருட்டும் தீய வழியில், தகாத செயல்களில் ஈடுபட்டு வருந்துகின்றனர். யாரும் கடவுளை நினைப்பதில்லை. இந்த நிலையில் கடவுளை வணங்கி மோட்சம் பெற வேண்டும் என்பதாக இந்நாடகம் உருவாக்கப்பட்டுள்ளது. மக்கள் பேராசைக் கொள்ளக் கூடாது என்பதை நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. மேலும் இப்பிரதியை ஆழ்ந்து நோக்கும்பொழுது சைவம் பரப்புதலே நாடக நோக்கமாக இருக்கின்றது. பிரம்மன், விஷ்ணுவால் முடியாத காரியத்தை சிவன் செய்வதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் சைவத் திருமுறைகளிலிருந்து பாடல்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

திருஞானசம்பந்தரின் முதல் மூன்று தேவாரங்களிலிருந்தும், திருநாவுக்கரசரின் 4, 5, 6-ஆம் தேவாரங்களிலிருந்தும் ஏழாம் திருமுறையான சுந்தரரின் தேவாரத்திலிருந்தும் பாடல்கள் கையாளப்பட்டுள்ளன. மேலும் மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடல்கள், தாயுமானவரின் பராபரக்கண்ணி உள்ளிட்டப் பாடல்கள், பட்டினத்தாரின் திருவேகம்பமாலை பாடல்கள், திருக்குறள் ஆகியவை இடம் பெற்றுள்ளன. நாடகம் சார்ந்து தனியான ஒரு வெண்பா இடம் பெற்றுள்ளது.

**பாத்திரங்களின் தன்மைகள்**

இந்நாடகம் தேவலோகத்திலும், பூமியிலும் நிகழ்வதாக அமைந்துள்ளது. குபேரன், மந்திரி, சேவகன், பிரம்மன், விஷ்ணு, சிவன், சரசுவதி, லட்சுமி, பார்வதி, நாரதன், சேவகன் ஆகியோரும் சோமேச ஐயர், பங்கய நயனி, மகன் லிங்கேசன் போன்றோரும் தனேஸ்வர அரசன், மந்திரி, சேவகன், வெட்டியான் முதலியோரும் நாடகப் பாத்திரங்கள் ஆவர்.

இந்நாடகத்தினுள் நிகழ்கின்ற எல்லா விளைவுகளுக்கும் சிவனின் திருவிளையாடல்களே காரணமாகின்றன. எனவே இது சைவத்தைத் தூக்கிப் பிடித்தலையே நோக்கமாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது. சோமேசஐயர் என்ற பாத்திரம் தன் பணங்களையும்,பொருட்களையும் பரத்தையர்களிடம்

சென்று அழிப்பதாகவும், மனைவி ப.நயனி அதனைப் பற்றிக் கேட்பதாகவும் அமைந்துள்ளது. ஆனால், தன் கணவனுக்கு எந்த விளைவும் அவளால் ஏற்படுத்த முடியவில்லை. இந்தக் கருத்தோட்டத்தின் ஊடாக அனுகும்பொழுது ஆணாதிக்கச் சிந்தனை மரபின் நாடகமாகத் தனேஸ்வர நாடகம் அமைகின்றது.

பிராமணச் சமூகத்தில் பிறந்த சோமோச ஐயர் என்னதான் ஏழ்மையில் வாடினாலும், அவர் தனேஸ்வரத்திற்கு வழி கேட்கும்பொழுது, ஒரு நபரை 'சூத்திரப்பயல்' என்பது உயர்சாதி என்ற மனப்போக்கு அவருக்குள் எவ்வளவு வேரூன்றி இருக்கின்றதென்பதை அறிய முடிகின்றது. தனேஸ்வர மன்னன் சோமேச ஐயருக்குச் செய்தி அறிவிக்க வெட்டியான் ஒருவரை அனுப்புகின்றான். இதன் மூலம் செய்தி அறிவிக்க, இறப்பு சார்ந்த செய்தி அறிவிக்க ஒரு சமூகம் பயன்படுத்தப்பட்டுள்ளமை அறியமுடிகிறது.

இவ்வாறு பல சிந்தனைகளுக்கு உட்படுத்தி இந்நாடகப் பிரதியை வாசிக்க முடியும். பிராமண சமூகத்தினர் தவறு செய்திருப்பினும் அவர் திருந்துகின்ற பொழுதில் கடவுள் நேராக வந்து அவரை மன்னித்துத் திருந்திடச் செய்து அருள் வழங்குதலின் மூலம், கடவுளுக்கும் அச்சமூகத்திற்கும் உள்ள நெருக்கத்தை எடுத்துக் கூறி சைவத்தைப் பரப்பும் நோக்கத்துடனே

ம.திருநாவுக்கரசு பிள்ளை அவர்கள் இந்நாடகத்தை எழுதி உள்ளார்.

## நாடக நடை

பிராமணர்கள் சார்ந்த பிரதி என்பதால் வடசொற்கள் மிகுதியாக உள்ளன. எழுத்து நடையிலும் சில இடங்களில் பேச்சு நடையிலும் அமைந்துள்ளன. சாக்கிரதை, சேவகா, கூன், செவுடு, மொண்டி, முடம், என்னடா, சும்மா, ரொம்ப முதலான பேச்சு வழக்குச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. பிராமணர்கள் பயன்படுத்தக்கூடிய பிரம்மஸ்ரீ, ஆத்துக்காரி, நித்திரை மூலஸ்தானம், உதிரம், சிரோஷ்டம், புரோஷித்தல் போன்ற பல சொற்கள் இடம்பெற்றுள்ளன. இந்நாடகம் வசன நடையில் அமைந்துள்ளது. பாத்திரங்கள் இடையிடையே தேவாரப் பாடல்கள், திருவாசகப் பாடல்கள், தாயுமானவர் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள் பாடுகின்றனர்.

## பதிப்பு நோக்கம்

இந்நாடகப் பிரதித் தாள் சுவடிக் கொண்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நாடகத்தை 1958-59 இல் ஓலைச்சுவடியில் இருந்து தாள்சுவடிக்கு மாற்றி எழுதப்பட்டுள்ளது. சாரதா என்பவர் படியெடுத்துள்ளார். மேலும் சாரதா, வசந்தா இருவரும் மூலத்தையும் தாள் சுவடியையும் ஒப்பீடு செய்துள்ளனர். இக்குறிப்புகள் தாள் சுவடியில் காணப்படுகிறது. தற்போது ஓலைச்சுவடி

இல்லை. 1955-56 இல் சென்னையில் உள்ள பவானந்தம் அகாடெமி, சுவடியியல் நூலகத்திற்கு இத்தாள் சுவடியை வழங்கியுள்ளது.

தமிழர் நாடக வரலாற்றில் அகத்தியம், பரதம், குண நூல், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், பரிமளகர நாடகம், சோமகேசரி நாடகம், பூம்புலியூர் நாடகம் உள்ளிட்ட முப்பத்தொன்றுக்கு மேற்பட்ட நாடக இலக்கிய இலக்கண நூல்கள் மறைந்துபோனதாக 'தமிழ் நாடக வரலாறு' எனும் நூலில் கு.சா.கிருஷ்ணமூர்த்தி கூறுகின்றார். மயிலை சீனி. வேங்கடசாமியும் தனது "மறைந்து போனத் தமிழ் நூல்களில்" கூறுகின்றார். அந்த வகையில் தனேஸ்வர நாடகமும் இடம்பெறக் கூடாதென்பதை நோக்கமாகக் கொண்டு எல்லாவித வெறுப்பு விருப்புகளுக்கும் அப்பாற்பட்டு இந்நாடகத்தைப் பதிப்பித்துள்ளேன்.

தமிழரின் கலைசார்ந்த வடிவங்களுள் நாடகம் என்பதும் அடங்குகிறது. எல்லாக் கலைவடிவங்கள் போலவே நாடகமும் இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியங்களில் நாடகமானது தமிழர் பண்பாடுகள் சார்ந்த மரபும் வடமொழி பண்பாடுகள் சார்ந்த மரபும் கலந்தக் குறிப்புகளாகக் கிடைக்கின்றன. இலக்கியங்களில் நாடகம் என்ற சொல் குறிக்கப்பட்டிருப்பினும் அது வெவ்வேறு பொருள்களைத் தருவனவாக உள்ளது.

# நன்றியுரை

என்னை இவ்வுலகிற்கு அறிமுகம் செய்து கல்வியின் வாயிலில் நுழையச் செய்த என் பெற்றோர்கள் க.பார்வதி, இரா.கலைச்செல்வன் ஆகியோருக்கு என் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் சுவடியியலும் பதிப்பியலும் என்னும் பட்டயப் பேற்றிற்காக என்னை நெறிப்படுத்திய எம்துறைப் பேராசிரியரும் துறைத்தலைவருமான **வீ.அரசு** அவர்களுக்கு என் நன்றி. மேலும் என்னை பதிப்புலகில் அறிமுகம் செய்தமைக்கு மீண்டும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

சுவடியியல் பயிற்சி வகுப்புகளில் சீரிய முறையில் சுவடியை வாசிக்கும் முறைமைகளையும், யாப்புகள் குறித்த விளக்கங்களையும் அளித்த எம்துறை ஆசிரியர் முனைவர் **ய.மணிகண்டன்** அவர்களுக்கு நன்றி. இப்பதிப்பு சார்ந்து எனக்கு நூல்கள் கொடுத்து உதவிய எம்துறை ஆசிரியர்களான முனைவர் **கோ.பழனி** அவர்களுக்கும், முனைவர் **ஆ.ஏகாம்பரம்** அவர்களுக்கும் என் நன்றி. மேலும் வடமொழி சொற்களுக்குப் பொருள்களைக் கூறிய சமஸ்கிருதத் துறை ஆசிரியர் **திரு. இராஜா** அவர்களுக்கு நன்றி.

சென்னைப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடியியல் நூலகத்தில் இருந்து 'தனேஸ்வர நாடகம்' எனும் தாள்சுவடியை வழங்கிய முனைவர் சௌந்திரபாண்டியன் (காப்பாட்சியர்) அவர்களுக்கும், தேவையான வழிகாட்டி நூல்களை வழங்கிய சுவடி நூலக ஊழியர் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சுவடியைப் பதிப்பிக்க, சுவடி தேடுதலில் உதவி புரிந்தும், ஆலோசனைகள் வழங்கியும் என்னை ஊக்கப்படுத்திய நண்பர்கள் பிரேம், தேவராஜ், ஜெயப்பிரகாஷ், தோழிகள் நஜ்மா, கலைச்செல்வி ஆகியோருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இச்சுவடியை சிறந்த முறையில் அச்சிட்டு, சுவடி பதிப்பேட்டினைச் சிறப்பாக உருவாக்கித் தந்த 'டுடே கிராபிக்ஸ்' நிறுவனத்தாருக்கும், அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கும் என் நன்றிகள்.

*க.அமரேசன்*

# தனேஸ்வர நாடகம்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பேராசை விலக்கமென்னும்

தனேஸ்வர சரித்திரம்

ஸ்ரீ சிவபெருமானானவர் முன்னொரு காலத்தில் குபேரனுடைய வேண்டுகோளால் மாயாசம்பந்தத்திலுற் பவிக்கும் நன்மை தவிர பாதகங்கள் யாவும் இக்கலியுகத்தில் பிரஜைகளை வருந்தாதபடிக்குத் தாம் இச்சரிதையை திருவிளையாடலாகச் செய்ததாய் தெய்வபக்தி வாய்ந்த பரப்பிரம்ம சுவரூபியாகிய பிரம்மஸ்ரீ நரசிம்ம பாகவதரவர்கள் பக்திமேன்மேலும் விருத்தியடையும் படிக்கு இதை காலட்சேபமாக செய்யக் கேட்டு ஆனந்தித்தோம். அதை மேற்படி பாகவதரவர்களையே குரு முகூர்த்தமாக நினைந்தும் நமது சமயாச்சரிகளின் பாசுரங்களையே எழுதப்போகிற ஒரு நாடகத்துக்குத் தகுந்த பாடல்களாக அமைத்தும் சரித்திரமாகவும், நாடகமாகவும், எழுதத்துணிந்தனம். மேலும் இதை எழுதத் துணிந்த நான் சிற்றறிவுடையோ னானதினால் வாசிப்பவர்கள் சொற்குற்றம் மற்றும் எவ்விதமான குற்றமிருந்த போதினும் மன்னிக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

ம. திருநாவுக்கரசு பிள்ளை

## சிவமயம்

## தனேஸ்வர சரித்திரச் சுருக்கம்

குபேரன் தன் கொலு மண்டபத்தில் வீற்றிருக்கையில் தான் மந்திரியாலும், மற்றுள்ளோராலும் பிரஜைகள் மாயையிலிருந்து உற்பவிக்கும் ஆணவத்தில் மயங்கிப் பேராசை மேலிட்டு பாபக்கிருத்தியங்களுக்கு ஈடுபட்டு தெய்வ பக்திகுன்றிப் பிறப்பும் இறப்புமே அதிகரித்துப் பேரின்ப சுகத்தையடையாமல் சிற்றின்பத்தையே குடிகொண்டு உழலுகிறார்கள் எனத் தெரிந்து வியாகூல முற்றுதான் அந்த மாயா சம்பந்தமான ஆசையைப் பூலோகத்தில் ஒழிப்பதற்கு யாது செய்வோம் என்று யோசித்திருக்குங்கால், நாரதர் தோன்றி பிரம்மனிடம் போய் யோசனை செய்வாயாகில் அவர் அதற்குத் தகுந்த முயற்சி செய்வாரென அப்படியே குபேரன் பிரம்மனிடம்போக, பிரம்மன் தனது சாபத்தையும் கஷ்டத்தையும் தெரிவிக்க இருவரும் ஸ்ரீமகாவிஷ்ணுவிடம் போக அந்த மாயை வெல்லுவதற்கு நம்மாலேயல்லாம் ஆவதொன்றுமில்லை. ஆனதினால் நாம் நமது கோரிக்கையைக் கைலாசநாதனாகிய சிவபெருமானுக்குத் தெரிவித்தால் அவர் அதற்குத் தகுந்த ஒரு ஏற்பாட்டை தேடி வைப்பார் என்று நயந்து கூற, இம்மூவரும் கைலாசநாதனிடம் சென்று வணங்கி அவரவர்களுடைய வேலையை நிறைவேற்ற அதிக கஷ்டமாயிருப்பதாய் தெரிவித்து நிற்க, பகவான் இம்மூவருக்கும் ஒருவிதமான

திருவிளையாடலை நிறை வேற்றுவதாகத் தெரிவித்து உடனே குபேரனுக்குப் பூலோகத்திற்கு வட பாரிசத்தில் ஒரு பட்டினம் புதிதாய் ஏற்படுத்தி அதில் ஒரு தேவாலயம் புதுபித்து அதன் மூலஸ்தானத்தின் பூமியில் சில திரவியங்களையும் நல்ல விலையுயர்ந்த ரத்தினங்களையும் நிரப்பி அதன்பேரில் ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து அந்த சிவலிங்கத்தின் கிழ் (யார் ஒருவன் நிறைந்த பௌர்ணமி கூடிய சோமவார சுபதினத்தில் இராத்திரி பனிரெண்டுமணிக்கு நல்ல பிராமண குலத்திற் றுற்பவித்தப் பிள்ளையைத் தாயார் தலையைப் பிடிக்கவும் தகப்பனார் காலைப் பிடிக்கவும் பிள்ளையைக் கவிழ்த்து பிடரியை வாளினால் பஞ்சாட்ஜர செபத்தைச் செபித்துக் கொண்டு ஒருவொரு அறுப்பாய் அறுத்து குரல் வழிவரையில் அதன் உதிரத்தை நமக்கு புரோஷக்கிறானோ அவன் இதன் அடியிலுள்ள திரவியத்தை யடைவான்) என்று சிலாசாசனம் எழுதி வைத்தால் அப்போது அதை வாசிப்பவர் இப்பேர்க் கொத்த பாபமான காரியத்தைச் செய்தும் ஒருவன் இந்த மாயா சம்மந்தமான பொருளையடைய வேண்டுமா என்று உணர்ந்து அதிலிருந்து அவர்கள் விசாரணையில் ஈடுபட்டு அதிக ஆசையை வகிக்கமாட்டார்கள். மேலும் நீ அந்தப் பட்டினத்திற்குத் தனேஸ்வரமென்றும், அந்த லிங்கத்திற்கு தனேஸ்வர சுவாமியென்றும் பெயரிட்டு வையென்று ஆக்கியாபித்தார். அப்படியே குபேரன் செய்ய நெடுநாள் பொருத்து அந்த ஊரை அரசாளப்பட்ட

இராசகுமாரன் தன்மந்திரியை இந்த சிலாசாசனத்தில் எழுதியிருக்கும் படியானதை நாம் செய்து ஏன் இந்தப் பொருளையடையக் கூடாது என்று வினவ, அப்போது மந்திரி சகலவித நீதிகளை எடுத்து போதித்தும், அதற்கு அரசன் ஈடுபடாமற் மந்திரியை வேலையிலிருந்து அப்புறப்படுத்தி அந்த காரியத்தை அரசன் தனக்குத்தானே செய்யக்கருதி பிள்ளையை சம்பாதிக்க எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கும் தருவாயில் தென் தேயத்திலிருந்து ஒரு வைதிக பிராமணன் தன் பிதுரார்ஜிதத்தை பரத்தையர்களுக்கு கொடுத்தழித்து தன் உத்தியோகமான மணிய அதிகாரத்தையும் இழந்து வேறெங்கும் தகுந்த சீவனம் கிட்டாமல் மனவாட்டமுற்று பிரதேசங்களிலாகிலும் போய் அக்ஷய பாத்திரமாகிலும் எடுத்து உண்டு பிழைப்போமென்று தானும் பெண்சாதி பிள்ளையுமாக ஒன்றுகூடி அந்த தனேஸ்வரமென்கிற ஊரிலுள்ள அக்ரகாரத்தில் குடியிருந்து அற்ப சீவனம் செய்து கொண்டிருக்குங்கால் ஒருநாள் தனேசுவரர் கோயிலுக்குப் போய் சுவாமித்தெரிசனை செய்யும்போது அரசன் பிள்ளையைப் பார்த்து அவ்வாணைப் பக்குவபடுத்தி நிச்சயம் செய்து வாங்கிக்கொண்டு மேற்படிதினம் வந்ததும் காரியத்தை நிறைவேற்ற பிள்ளைபாதை பொருக்காமல் கதறி தாயாரைக்கோரியும் தகப்பனைக் கோரியும் தன்னை யிம்சிக்கும்படியான அரசனைக் கோரியும் யாதொரு பட்சபாதக மில்லாமல் இருக்கக்கண்டு ஆதரவற்று இனி நம்மை

காப்பாற்றுவதற்குக் கடவுளேயென்று தன் பூர்வகியானத்தினால் அறிந்து சுவாமிகள் நீயே கதியென்று பிரலாபிக்க சுவாமி ருத்திர மூர்த்தியானபடியால் இந்த உதிரம் சிரசில் விழவும் அவர் பேரானந்தத்தை அடைந்து சொக்கிக் கிடப்பதை பார்வதி தேவியார் அறிந்து ஆ!"

'இதென்ன விபரீதம்' பூலோகத்தில் இப்பவும் சண்டாளன் செய்யும்படியான காரியத்தைச் சற்றேனும் கவனியாமலும் கதறுகிறப்பிள்ளையை இரட்சிக்காமலும் அசைவற்றிருக்கிறீரே! இது காரியம் நம்மை வற்புறுத்த வில்லையா? நமது பிள்ளைகளான வினாயகனுக்கும் சுப்பிரமணியனுக்கும் இந்த செய்கை யாராகிலும் நிறைவேற்றினால் சும்மாயிருப்பீரோ?' என்று வினவ, அப்போது பகவான் கொஞ்சம் நிதானியென்று சொல்ல பார்வதிதேவிக்குக் கோபம் இரட்சித்து வரவா? எனத் தேவியார் கேட்டுப்புறப்பட, உடனே சுவாமி 'ஏ, மாயே, நீ பூவுலகம் போகாதே, நில், நில் என்றும் (ஒருக்கால் இவள் மாயாசக்தி இவள் காளிரூபங்கொண்டுத்தான் துஷ்டனை சின்னா பின்னப்படுத்துவள். மேலும் அவன் அதை பொருக்கக் கூடிய இராட்சதனும் அசுரனுமல்ல என்று எண்ணங்கொண்டு குபேரனுடைய வேண்டுகோளுக்கிறங்கி நடத்தின திருவிளையாடலானதினால் நாமே பிள்ளையை ரட்சித்தும் அந்த அரசன், இந்த மாயா சம்பந்தமான ஆசையை விட்டு விலக வேண்டிய முறைமையைச் சொல்லிவிட்டு வருவோம். நீ என் பின்னோடு வா என்று

திடீரென்று சிவலிங்கத்தின் மூலமாக வெளிக்கிளம்பி 'அடா துஷ்டா பொரு. என்ன காரியம் செய்யத்துணிந்தனை. பாபி நீ நல்வழியில் உபாசித்தால் இதற்கு மேலான சாம்பிராஜ்ஜியத்தை அடைவதுந்தவிர ஞானத்தையும் அடையலாமே சற்றேனும் பிரம அத்தியாச்சே யென்றில்லாமலும், சிவலிங்கமாச்சே யென்றில்லாமலும் இப்பேர்க் கொத்த அடாத காரியத்தைச் செய்து பொருளை அடையக் கருதினால் நீ காட்டுக்குச் சென்று தீவிரமான தபசு செய்து பிரம்மஹத்தியை ஒழித்து பூர்வ கர்மத்தை நீத்து பின் நம்மோடு தேசோன்மயத்தில் கலப்பாய். இப்பவும் உன்னை இவ்வளவோடு மன்னித்தோம்.

பிள்ளையை நோக்கி, 'அப்பா உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் என்று கேட்க, சுவாமிகள் எனக்கு நீர் எப்போது தங்களைக் காணும்படியான பக்தியை உண்டு பண்ணி விட்டீரோ, அப்போதே நான் எதைக்கோரப் போகிறேன். தங்களுடைய பாதாரவிந்தமே சிரேஷ்டம் என, அப்பா நீ இன்னும் இந்த பூலோகத்தின் சுகத்தை யாதொன்று மறியாதவன். ஆனதினால் நீ இந்த இராஜ்ஜியத்தைப் பழைய மந்திரியின் மூலமாய் மனுநீதி தவராமல் அரசாண்டு பிரசைகளின் பேரில் கருணையாயிருந்து நம்மையும் உபாசித்து பரிபக்குவ நிலையடைந்து நமது மோட்ச சாம்ராஜ்யத்தை அடைவாயாக என்று ஆசீர்வதித்து மறைந்தனர்.

சுபம்! சுபம்! சுபம்!

திருச்சிற்றம்பலம்

இப்பவும் இந்த சரித்திரம் மேற்படி பாகவதர் செய்த காலட்சேபத்திற் பிரகாரம் எழுதியிருக்கிறது. ஆனால் நாடகமோ குபேரன் பிரம்மாவையும் ஸ்ரீமன் நாராயணனையும் கண்டபின் பகவானை பக்தி விஸ்வாகத்தால் கண்காட்சியாய் கண்டதாயும் பகவான் அசரீரி மூல்யமாய் தெரிவித்ததாயும் கதை வளராத படிக்கும் எழுதுவோம். அதுவுமல்லாமல் பிள்ளையை அத்தி செய்யும்போது பிள்ளை பிரலாபித்த தாயில்லாமல் கோயிலினுள் போனதும் அரசன் தாழிடச் சொல்வதைப் போல் சொல்லி பரமசிவனுக்கும் பார்வதிக்கும் தர்க்கத்தை எழுதி அதன்பின் அவர்களை இரட்சித்ததாய் எழுதுவோம். மன்னிக்கவும்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

"பேராசை விலக்க மென்னும்"

தனேஸ்வர நாடகம்

I அங்கம் I சீன்

குபேரன் சபைக்கு வருகை

(தேவாரம்)

குபேரன்:

*கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே*
*செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய*

*முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே*
*பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.......*

குபேரன் : மந்திரி, பூலோகத்தில் பிரசைகள் தங்கள் பூர்வ புண்ணியத்திற்கீடாக, பகவான் அருளின்படி நம்மால் கொடுக்கக்கூடிய சாம்பிராஜ்யத்தை வகித்து சந்தோசமா இருக்கிறார்களா?

மந்திரி : அரசே, இப்பவும் சுகமாகத்தான் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும் கலியுகயுற்பத்தியினால் அவரவர்களுக்கு ஆசை மேலிட்டு தாம் தாம் நித்திய கர்மங்களை அனுஷ்டிக்கவும், பிறர் கஷ்டத்தைக் கவனிக்கவும் பரமாத்ம பக்தியைத் தேடவும் அனேகரைக் காணோம்.

குபேரன் : அப்படியா? மந்திரி

மந்திரி : ஆம், அரசே

சேவகன் : சுவாமி, ஒரு விண்ணப்பம்.

குபேரன் : சேவகா என்ன சொல்? பாதகமில்லை, சொல்.

சேவகன் : நான் தாங்களை விடுமுறைக் கேட்டு பூலோகம் போனேன். அங்கே செல்வத்தைத் தேட வேண்டியும் அவர்கள் அந்த செல்வத்தை நிலையுளதென நினைந்தும்

மறுமைக்கு வேண்டிய புண்ணியத்தைச் செய்யாமலும் அனேகர் கூட்டம் கூட்டமாய் இருக்கிறார்கள் சுவாமி.

க.பிள்ளை : சுவாமி, இவர்கள் சொல்லக் கூடிய சங்கதி உண்மையா யிருப்பதால்தான், பிறப்பு, இறப்பு அதிகமாயிருப்பதுந் தவிர ஆசையும் மேலிட்டு நாம் கொடுத்த வரையில் திருப்தியில்லாமல் கஷ்டத்தை விளைவிக்கிறார்கள். அதற்கு திருஷ்டாந்திரம் இதோ, பாருங்கள் கணக்கு புஸ்தகத்தை. ஒரு கையில்லாத முடவன் கூட முழங்கையிலாகிலும் ஆபரணத்தைத் தரிக்க வேணும் என்கிற கோரிக்கைக்கு அங்கிருந்து வந்த விண்ணப்பத்தைப் பதிய வைத்திருக்கிறேன்.

குபேரன் : கணக்குப்பிள்ளை, அவரவர்கள் கோரும் படியானதை அப்போது கணக்கில் பதியவை, சாக்கிரதை, பிரசைகள் அதிகமென்று விட்டு விடப்போகிறாய். எப்படியிருந்தாலும் நிறைவேற்ற வேணும்.

க.பிள்ளை : சுவாமி, செய்யத்தடையில்லை. ஆனால் வேலைதான் ரொம்ப கஷ்டம். தயவு செய்து ஒரு ஒத்தாசை கொடுத்தால் நலமாயிருக்கும்.

சேவகன் : சுவாமி எனக்குக் கூட கஷ்டம் அதிகமே. பூலோகத்திலிருந்து வரும் விண்ணப்பத்தைக் கணக்குப் பிள்ளைக்கு சேர்ப்பதே பெரியகஷ்டம், பெரிய வேலை.

குபேரன் : மந்திரி, பூலோகத்தில் கூட்டமும், பிறப்பு, இறப்பும் அதிகமென்று தெரிவிக்கிறீரே. அப்போது கைலாயம் போகிறவர்களும், வைகுந்தம் போகிறவர்களும் யாரும் கிடையாதா?

மந்திரி : அரசே கிஞ்சித்து பேர்தான்.

சேவகன் : சுவாமி, கைலாயத்துக்காணாலும், வைகுந்தத்திற்கானாலும் இந்த வழிதானே போகவேண்டும். விசேஷம் காணோம்.

குபேரன் : சரிதான். இதற்கென்ன யோசனை, மந்திரி?

மந்திரி : அரசே, எது எப்படியிருந்த போதிலும் பரமாத்மா பக்தியில்லாமல் பிறப்பு, இறப்பு அதிகமாயிருக்கிறதே அதைத்தான் கவனிக்க வேண்டும்.

குபேரன் : ஆம். அவர்கள் நமது சமயாச்சாரிகள் செய்திருக்கும்படியான பாசுரங்களை வாசிக்கிறதில்லையா? அப்பர் சுவாமி சொல்லியிருக்கிறாரே.

(தேவாரம்)

திருத் தாண்டகம்

*திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்*
*தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்*
*ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்*
*உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்*
*அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்*
*அளியற்றால் பிறந்தவா றேதோ வெண்ணிற்*
*பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்*
*பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே.*

சேவகன் : சுவாமிகள், யாரோ முனீஸ்வரர் நாரதரைப் போல் காணப்படுகிறது.

குபேரன் : மந்திரி நாரதரா?

மந்திரி : ஆம், அரசே.

குபேரன் : குருநாதா தங்களை அர்ஜித்தேன். வரவேணும் இப்படி அமரவேணும்.

மந்திரி : ஏ, ஜெகத்குரு, லோகசஞ்சாரா, அடியேன் நமஸ்காரம்.

சேவகன் : சுவாமிசேவகன் தெண்டம் சமர்ப்பித்தேன்.

நாரதர் : சுகிபவா, எழுந்திரு சேவகா எழுந்திரு, மந்திரி அரசே உங்களிருவருக்கும் கல்யாண

ஆசீர்வதித்தேன். கடவுள் ரட்சிப்பாராக. அமரும் உட்காரும்.

குபேரன் : குருநாதா, நாங்கள் செய்த பாக்கியமே பாக்கியம் நாங்கள் ஒரு யோசனை செய்து கொண்டிருக்கும்போது வந்த தாங்கள் யோனையின் குறையை ஈடேற்ற வந்த தெய்வம் போல் தோற்றுகிறதும் தவிர மேற்படி காரியத்தை நிறைவேற்றத் தகுந்த யோசனைச் சொல்லக் கூடியவரும் தாங்களேயாகும்.

நாரதர் : குபேரா, அதென்ன குறையென்று சொன்னாயே அதென்ன? நீ இந்த ஈரேழுலகங்களுக்குள் குறைவில்லாத போக பாக்கியத்தை அடைந்திருக்கிறவன் நீ அல்லவா.

குபேரன் : குருநாதா, வாஸ்தவமே. இருந்தாலும் பிறப்பு, இறப்பு அதிகமாய் மேற்படி மாயா ஆசையில் கஷ்டப்படும் குறைதான். (பூலோகத்தில் விசேஷமாய்)

நாரதர் : குபேரா, இது சங்கதி நான் முன்னமே என்னுடைய திருஷ்டியால் அறிந்தேன். இருந்தாலும் அந்த ஆசையை விலகச் செய்வது தம்மாலே ஆகாது. அது மும்மூர்த்திகளாலேதான் முடியுமே தவிர

வேறொருவரால் ஆகாது. ஆனதினால் நீ பிரம்ம தேவனைப்போய் காண். ஒருவேளை ஆசையை விலகச் செய்யாவிட்டாலும் சிருஷ்டியையாகிலும் குறைப்பாரோ என்னமோ எதற்கும் போய் பார்.

குபேரன் : ஆனால், அப்டியே குருநாதா. தங்கள் வார்த்தையை சிரமேற் கொண்டு போகிறேன். தாங்கள் எதற்கும் என்னோடு கூடவந்தால் உத்தமமாயிருக்கும்.

நாரதர் : அப்பா, நான் அங்கு வரவேண்டுமா? சரிதான். இந்த நாரதனுக்கு என்னவேலை. ஊர்திரிந்து பகவத்தியானம் செய்வதை விட்டு சும்மாயிருப்பவர்களைத் தூண்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறானே என்று ஏசுவார்.

குபேரன் : குருநாதா, ஒருவேளை என்னையும் ஏன்வந்தாய் என்று பிரம்மன் ஏசுவாரோ, கோபிப்பாரோ?

நாரதர் : குபேரா, அதைப்பற்றி சிந்திக்காதே, அந்த மாயையின் வேகத்தைத் தணிப்பது எல்லோர்க்கும் அவசியமே அறிவாய். நீ போ ஆசீர்வதித்தேன், கல்யாண நான்போய் வருகிறேன்.

குபேரன் : அப்படியே குருநாதா செய்யும். மந்திரி நாம் போய் வருமளவும் நமது இராஜ்யத்தை சாக்கிரதையாய் பார்த்துக் கொள்வதுந் தவிர பிரசைகளின் குறையை அப்போது ஈடேற்றிக்கொண்டு வா.

வெண்பா

*இன்றுவருமோ நாளைக்கே வருமோ அல்லதுமற்*
*றொன்றுவருமோ அறியேன் என்கோவே - துன்றுமல*
*வெம்மாயை யற்று வெளிக்குள் வெளிக்கடந்துச்*
*சும்மா யிருக்க சுகம்.*

திருச்சிற்றம்பலம்

குபேரன் : சேவகா, கூட வா.

சேவகன் : இதோ வந்தேன்.

II சீன்

(பிரம்ம லோகம்)

பிரம்மன் : சரஸ்வதி, யாரோ நம்மைத்தேடி வருகிறாப் போல் தோன்றுகிறது.

குபேரன் வருகை:

*முத்திநெறி யறியாத மூர்க்கரோடு முயல்வேளைப்*
*பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்*
*சித்தமல மறிவித்து சிவமாக்கி யெனைஆண்ட*
*அத்தெனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே*

சரஸ்வதி : சேவகா, யாரது பார்.

சேவகன் : அம்மணி நமது குபேரமாகப் பிரபு.

சரஸ்வதி : நாதா, குபேரராம்.

பிரம்மன் : என்ன, குபேரரா? ஏன் வருகிறார்? வரவேண்டிய காரணமென்ன?

சரஸ்வதி : சற்று பொருங்கள் வந்தால் தெரியும்.

குபேரன் : போற்றி, போற்றி, சதுரழகம் படைத்த என்னய்யனே போற்றி என் அம்மணி கல்வியென்னும் சாரத்தைத் தித்திக்கும் அமிர்தம் போல் ஊட்டினவள் தேவியே நின் அடிமலரிணைக்குச் சரணம், சரணம்.

பிரம்மன் : குபேரா, ஏது காரணம் இவ்வளவு தூரம்.

சரஸ்வதி : அப்பா, குபேரா, உட்காரு, சேவகா ஆசனம் கொடு.

சேவகன் : ஏ, பிரபு, மகாப் பிரபு, உட்காரும், மகானுபாவா உட்காரும்.

குபேரன் : இருக்கட்டும் சேவகா இருக்கட்டும். ஏ, சதுர்முகக்கடவுளே தாங்கள் திருவுளச் சம்மதியால் நான் வந்த காரியத்தைச் சொல்லச் சொன்னால் எடுத்துரைக்கிறேன்.

சரஸ்வதி : பாதகமில்லை சொல்லப்பா, சொல். (கோபிக்கமாட்டார்)

குபேரன் : ஏ, சுவாமி இப்பவும் இப்பூவுலகிலுள்ள பிரசைகள் எல்லாம் கலியுக யுற்பத்தியால் மாயாசம் பந்தத்தில் ஈடுபடுகிறார்களே. அதைத் தங்களுக்குத் தெரிவிப்பதுதான்.

பிரம்மன் : என்ன குபேரா? அது எனக்கு முன்னமே தெரியும். அதைப்பற்றி உனக்கென்ன பாதை. அதை நீ கவனிப்பானேன்?

குபேரன் : இல்லை, இல்லை.....

பிரம்மன் : என்ன விழிக்குராய் சிக்கிரம் சொல்.

சரஸ்வதி : என்ன நாதா? அதை அவரைக் கேட்பானேன். எப்போது பிறப்பும், இறப்பும் அதிகமாய் ஆசையும் மேலிடுகிறதோ அப்போது ஒருவன் அஞ்ஞானத்தினாற்றன் கோரியது ஈடேராமற் போனால் ஏன் இந்தக் கடவுள் என்னைப் படைத்தாரோ என்று யேசுவதே ஒரு காரணம். அதை விவரிப்பானேன் என்று குபேரன் சும்மாயிருக்கிறார். அல்ல குபேரா?

குபேரன் : அம்மணி, அதுதான் அம்மணி, வெள்ளைக்கலை பூண்ட என் கல்விக்கடலே.

பிரம்மன் : ஏன் கடவுளைப் பிரசைகள் தூஷணை செய்யவேண்டும்?

குபேரன் : சுவாமிகள் மன்னிக்கவும். அவர்கள் தாங்கள் செய்த பூர்வ புண்ணியத்திற்கீடு இதுதான் என்றுணராது.

பிரம்மன் : ஆ! அப்படியா? அதற்கென்ன செய்ய வேண்டும்?

குபேரன் : சுவாமிகள் என்ன செய்யவேண்டியது என்று எனக்குப் புரியவில்லை. இருந்தாலும் அந்தமாயையென்னும் ஆசையைப் பற்றறுப்பதும் கொஞ்சம் சிருஷ்டியைக் குறைப்பது தான் என்று அடியேன் புத்திக்கு எட்டியது.

பிரம்மன் : சரஸ்வதி, குபேரன் வேண்டுகோளைப் பார்த்தனையா? மாயையாவது, பற்றருக் கிறதாவது, சிருஷ்டியைக் குறைக்கிறதாவது. இது என்ன பித்தம். குபேரா, பூலோகத்திலுள்ளவர் தாம் தாம் சுகப்பட்டுய்ய அவர் அவர்களே பக்தி செய்து நீ சொன்ன இருகாரியத்தையும் பற்றறுத்துக் கொள்ள ஞாயமிருக்க, நாம் அதுகளைப் பற்றருக்வேண்டுமென்று கோருகிறாயே. மேலும் அது நம்மால்

ஆகிற காரியமா? அது பற்றருந்தால் உலகம் அழிந்துவிடும். பிரம்மம் நம்மை சபித்துவிடும். இன்னும் எவ்வளவோ மகான்கள் காடு, மலை, வனாந்திரம் முதலானதில் திரிந்து கொண்டிருக்கிறார்களே. இறப்பு, பிறப்பு வாய்க்காத படிக்கும், மாயையனுகாதிருக்கும் படிக்கும் அது நீத்தோரால் அல்லவா முடியும். இதுகளை தேவர்கள் ஒழிப்பதா, என்ன இது? முடியாத காரியம்.

சரஸ்வதி : குபேரா, உனக்கு என்ன கஷ்டம் பிரசைகள் அனேகமாயிருந்தால் அவ்வாள் அவ்வாள் கோரியதைத் திருப்தி செய்ய அசக்தனாயிருப்பதுதானே.

குபேரன் : ஆம். அதுதான் அம்மணி.

சரஸ்வதி : அதற்கு போஷகக் கர்த்தனாகிய நாராயணனைக் கோருவதே நலம். அப்படி செய்.

பிரம்மர் : ஆம் குபேரா. அது உசிதமே. என்னைக் கோருவதில் என்ன பிரயோசனம். மேலும் நமக்கு சாபம் நேரிட்டு, கோயில் புதுப்பிக்கா வண்ணமும், பூசை செய்யா வண்ணமும் ஏற்பட்டிருக்கிறதே உனக்குத்

தெரியாதா? ஏது காரியத்திற்கும் நீ போய் மாயரான நாராயணமூர்த்தியை வேண்டிக்கொள்.

குபேரன் : சுவாமிகள் அவரை வேண்டிக்கொள்ள தடையில்லை. என் எசமானைப் போலொத்த அவரை இதைப் பற்றிக் காண்பதாயிருந்தால் ஓ, ஓ, உனக்கு வேலையில் கஷ்டப்பட மனமில்லாமலும் நாம் பிறருக்கு கொடுக்கக்கூடிய செல்வத்தில் மனந்தாளாமலும் இங்கு வந்தணையோ என்று ஒருவிதமாக பாவிப்பார் போல் தோன்றுகிறது. ஆனதினால் தாங்களாகிலும் என் கஷ்டத்தை அவருக்கு தெரிவித்தால் உத்தமமாயிருக்கும். வேண்டிக்கொள்ளுகிறேன் சுவாமி.

சரசுவதி : சற்று நீர்தான் குபேரனுடைய வேண்டுகோளுக்கிறங்கி நாராயணனிடம் யோசித்து ஒரு திருப்தி சொல்லிவிட்டு வாருமே, நாதா.

பிரம்மா : ஆனால் சரி குபேரா. நாம் வைகுந்தம் வருகிறோம். நீபோய்ச் சேரு வைகுந்தம். சீக்கிரத்தில் நான்போய் விடுவேன் காக்க வைக்காதே.

குபேரன் : அப்படியே போகிறேன் சுவாமி. அம்மணி உத்தரவு அளிக்கவேண்டும்.

சரஸ்வதி : சித்தம் போய் வருவாய் குபேரா, சித்தம்.

குபேரன் : சேவகா பின்னோடு வா.

சேவகன் : நான் கூட வரவேண்டுமோ சுவாமி?

குபேரன் : என்ன பேச்சு? வா.

திருச்சிற்றம்பலம்

III சீன்

(வைகுந்தம்)

மகாவிஷ்ணு : லக்ஷ்மி பாய்ச்சிகைத் தவறுகிறது. யாரோ பூலோகத்தின் சங்கதியைத் தெரிவிக்க வருகிறார் போல இருக்கிறது. ஆனால் மனிதரல்ல. தேவராயிருக்கக் கூடும்.

சேவகன் : சுவாமி, யாரோ வருகிறார். பிரம்மன், பிரம்மன்.

மகாவிஷ்ணு : யார்? யார்? பிரம்மனா? இதென்ன விபரீதம் ஏன் நம்மைத் தேடிவருகிறார். எங்கே? எங்கே? அவர் நமக்கு சமமானவராயிருந்த போதிலும் அவரைக் கொஞ்சம் உபசரிக்கத்தான் வேண்டும். இல்லாவிடில் உடனே கோபம் வரும். லக்ஷ்மி சாக்கிரதை, சரஸ்வதி நாயகன்.

சேவகன் : சுவாமி, இதோ வந்துவிட்டார்.

மகாவிஷ்ணு : வாரும், வாரும், உட்காரும், உட்காரும். நாமிருவரும் ஒன்று சேர்ந்து நெடுநாளாகி விட்டது. முன்னே ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டோமே. நீ பெரியவர், நான் பெரியவரென்று அப்போதுதானே பகவானால் சாபம் நேரிட்டு வியாதிகளைக் குடிகொண்டு மறுபடியும் அவராலேயே உத்தரவு பெற்று நமது சாபம் நீங்கி அவரவர்கள் லோகம் போனோமே. அப்போதுதான் நீரும் நானும் கூடியது. அல்ல. சரஸ்வதி தேவியார் சேமந்தானா.

பிரம்மன் : ஆம் நாராயணா. அது ஒருகாலம், தேவி க்ஷேமமே.

சேவகன் : அதோ, யாரோ வருகிறார்.

குபேரன் வருகை :

*நன்மையும் தீமையும் நாளும் நல்குமே*
*தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே*
*செனனமும் மரணமு மின்றித் தீருமே*
*இம்மையே ராமவென் றிரண்டெ முத்தினால்.*

பிரம்மன் : குபேரனா?

சேவகன் : ஆம், ஆம், சுவாமி. குபேரமகாப் பிரபுதான்.

மகாவிஷ்ணு : லக்ஷ்மி, இன்றைய தினம் சிரேஷ்டமான தினம் எல்லோரும் ஒன்று கூட.

இலக்ஷ்மி : ஆம். நாதா.

குபேரன் : ஸ்ரீமன் நாராயணா, வைகுந்தவாஸா, செகத் ரட்சகா, ஹரி நமோநாராயணா நமஸ்காரம். என் அம்மணி, மகாலக்ஷிமி, லோகநாயகி, கருணைக் கடலே நின்னடி மலரிணைச் சரணம், சரணம்.

இலக்ஷ்மி : குபேரா, வாரும் உட்காரும், சேவகா ஆசனம் கொடு.

மகாவிஷ்ணு : அப்பா, உட்காரும். பாதகமில்லை என்னகாரியமாக வந்தாயப்பா? நம்மால் ஆகவேண்டிய காரியம் ஏதாகிலும் இருந்தால் சொல். முடித்து வைப்போம்.

குபேரன் : செகத்ரட்சகா, சுவாமிகள், எல்லாம் அதோ தங்களோடு கூடயிருக்கிறாரே அந்தமகானு பாவனாகிய சதுர்முகக் கடவுளுக்குத் தெரியும்.

மகாவிஷ்ணு : அதென்ன தேவா? உமக்குத் தெரியுமென்று குபேரன் தெரிவிக்கிறாரே.

பிரம்மன் : ஏ, மாயவதாரா. நாராயணா, குபேரனுக்கு ஒரு கொள்கை. அது என்ன வென்றால், இப்பவும் மாயையின் ஆசை பூலோகத்தில் அதிகரித்து, பிரசைகள் கொடுத்த வரையில் திருப்தியாகாமலும், பரமாத்ம பக்தியில்லாமல் · பிறப்பும் இறப்பும் அதிகரிப்பதைப் பற்றியும் நம்மை பிரார்த்தித்துக் கொள்ளுகிறார்.

மகாவிஷ்ணு : ஆம், நாம் முன்னமே பூலோகத்தில் எவர் எதைக் கேட்டாலும் கொடுக்க உத்தரவு செய்திருக்கிறோமே. அவர்கள் நம்மை வேண்டும் பக்ஷத்தில்.

பிரம்மன் : ஆம், அப்படி வேண்டிக் கொண்டால் அல்லவோ, அப்படிக்கில்லையே, அஞ்ஞானம் மேலிடுகிறதே.

மகாவிஷ்ணு : ஆம், அதற்கு நாம் என்ன செய்கிறது. தேவா? அது நம்மாலெல்லாம் ஆகுமா? தங்களுடைய சமாதானம் என்னமோ? ஒருவேளை தாங்கள் மாயை விலகச் செய்து சிருஷ்டியைக் குறைத்தாலும் குறைக்கலாம்.

பிரம்மன் : என் சமதானமா? பக்தியல்லாது மாயை விலகச் செய்வது வேறொரு பதார்த்தமுமில்லை. மேலும் சிருஷ்டியைக் குறைப்பதும் நம்மால் ஆகக்கூடியதுமல்ல.

மகாவிஷ்ணு : ஆம், வாஸ்தவமே. பக்திதான் சிரேஷ்டம். ஆனதினால் குபேரா, நீ பூலோகத்திற்கு ஒரு சாசனம் எழுதியனுப்பி எல்லோரும் பக்தி செய்ய வேண்டியது என்று கட்டாயம் செய்.

குபேரன் : தாங்கள் அப்படி சொல்லிவிட்டால் எப்படி வைகுந்தவாஸா? எவ்வளவுபேர் பூலோகத்தில் சமயாச்சாரிகளாகவும், ஆழ்வாராதிகளாகவும் பிறந்து எத்தனையோ வேதங்களும், வேதாந்தங்களும், இதிகாசம், புராணாங்களும் செய்து உலகப் பிரசித்தியில் வைத்திருப்பதை யாரும் தேடவில்லையே, நான் எழுதப் போகிற சாசனம் சிரேஷ்டப்பட போகிறதா? பக்தவச்சலா, தீனதயாளா.

மகாவிஷ்ணு : மற்றபடி யாரையென்ன செய்யச் சொல்லுகிறாயப்பா? அப்படியல்ல வென்றால் அதையார் பற்றருப்பார்கள் என்றால் சர்வ சகசுதந்திரமுள்ள சம்புவாய் பிரபஞ்சமுதல்வனாய் உமாதேவி யாருக்கு இறைவனாய் பசுபதியாய், சிவ பெருமானாய், பார்வதிதேவியோடுங் கைலாயத்தில் வீற்றிருக்கும் படியான சாட்சாத் சிவசங் கரனால்தான் முடியும்.

குபேரன் : சுவாமி, அப்படி சொன்னால் எப்படி? நான் என்ன செய்வேன்?

மகாலக்ஷ்மி : குபேரா, என்ன பீடிக்கிறாய். அந்த மாயையால்தான், உலகமே அந்தமாயை தான். இந்த மூவருமல்லாத பிரமத்தோடு உடன் பிறந்தது என்று தெரியாதா? அது நல்லதையே செய்யுமென்றும் தீமையையே செய்யுமென்றும் கிடையாது. எவன் ஒருவன் பகுத்தறியும் படியான புத்தியில்லாமல் விபரீதப்படுத்திக் கொள்ளுகிறானோ அவன் அனுபவிக்கப் போகிறான் கஷ்டத்தை. பரமாத்ம பக்தியில்லாதவனிடத்தில் குடிகொள்ளும்பிணி. மேலும் அந்த மாயையில்லாமற் போனால் அதிகாரி ஏது? சேவகன் ஏது? எல்லாம் ஒன்றுதானே. பூலோகம் ஏது? அதை ஞானத்தால் அறிந்து விபரீத வேலைகளுக்குப் போகாமலிருக்க வேண்டும் பிரசைகள். அப்படி அதற்கு மிஞ்சி ஆசை மேலிட்டு தன்னுடைய அளவுக்குமேல் ஏதாகிலும் ஒன்றைக் கோரி பாதகமானக் காரியத்தைச் செய்தால் நரகத்தில் வந்துழலுகிறான். பிரம்மதேவனிருக்கிறார், கூன், குருடு, செவுடு, மொண்டி, முடமாய் பிறப்புவிக்க. அப்படியில்லாமல் பயபக்தி விஸ்வாசத்துடன்

யோக்கியதையாயிருந்தால் நாமிருக்கிறோம் காப்பாற்ற, அதிலேயும் அளவில்லாத கர்வத்தைப் படைப்பவனாயிருந்தால் சங்கரனிருக்கிறார் சம்மரிக்க. இதற்கு யோசனை என்ன?

மகாவிஷ்ணு : ஆம், லக்ஷ்மி. நீ சொன்னதெல்லாம் சரியே. இருந்தாலும் குபேரனுடைய கொள்கை அதல்ல. பிரசைகள் வியர்த்தமாய் நாளுக்கு நாள் பிறந்தும் இறந்தும் முத்தியென்பது சற்றேனும் அடையாமல் பூமிபாரமாய் ஏன் கஷ்டபட வேண்டும் என்றும் ஒரே மொத்தத்தில் பிரளயத்தில் அறிவதைக் காட்டிலும் பகவான் அருள்பெற்று வானுலகத்திலிருக்கட்டுமே என்கிற எண்ணமும் அல்ல குபேரா?

குபேரன் : ஆம் நாராயணா, ஆம் உண்மையே.

பிரம்மன் : ஏது? நாராயணா, லக்ஷ்மிக்கு இந்த மாயையின் வேகத்தைத் தணிப்பது சற்று மனமில்லை போலிருக்கிறது. சற்று கவனியும்.

மகாலக்ஷ்மி : அதல்ல தேவா. அதோடு கூட சமர்ப்புரிந்து அன்பர்களை அனுகாதபடி செய்யக்கூடிய சங்கார மூர்த்தி கைலையில் இருக்க நம்மை வற்புறுத்துவதில் என்ன லாபம்?

பிரம்மா : வாஸ்தவந்தான், லக்ஷ்மி. நானும் நாராயணனும், அதைக் கவனிக்கவில்லை. எல்லாவித சங்கடமும் தீர்க்க ஒருவர் இருக்கிறார் என்ற அது உண்மையே.

மகாவிஷ்ணு : ஏ, தேவா! நானும் முன்னமே தெரிவித்தேன்.

பிரம்மன் : ஆனால் அவரையாகிலும் பார்த்து யோசனை செய்வோமா? வருகிறாயா? கைலைக்குப் போவோம் நாராயணா.

மகாவிஷ்ணு : தேவா, எப்போது உமது சித்தம் அப்படி தோணிற்றோ அப்படியே செய்வோம். குபேரா, உனது வேண்டுகோளுக்கு நாம் கைலாச நாதனைக் கண்டுதான் யோசிப்போம். கூடிய சீக்கிரத்தில் நீ கைலைக்கு வா. நாங்களும் அங்கு போயிருக்கிறோம்.

குபேரன் : எல்லோருக்கும் தங்கள் கிருபா கடாச் சத்திற்கும் வந்தனம். அப்படியே போகிறேன் அம்மணி செகத்ரட்சகி தங்களுக்கும் வந்தனம்.

மகாலக்ஷ்மி : செய், அப்படியே. கடவுள் ரட்சிப்பாராக.

குபேரன் : சேவகா நாம் கைலைக்குப் போகவேண்டும் வா. காட்டுவழியாயிருக்கும் பயப்படாதே.

சேவகன் : சுவாமி இது என்ன நாம் காட்டிற்குப் போனால் வீட்டில் யார்? மேலும் நாம் வந்து நாளும் ஆய்விட்டது. கஷ்டமாகவும் தோன்றுகிறது.

குபேரன் : என்னடா? பகவானைக்காண்பது இலேசா? தடுத்து பேசாதே. கேவலம் ஒரு காரியம் கைகூட வேண்டியிருந்தால் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்களே, 'மெய் வருத்தம் பாரார் பசிநோக்கார், கண்டுஞ்சார் எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் செவ்வியருமையும் பாராரவமதிப்புங் கேளார் கருமமே கண்ணாயினார்' என்று தெரியாதா, உனதிஷ்டம் வந்தால் வா. நின்றால் நில். கட்டாயம் கிடையாது.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்

*கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்*
*விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை*
*யரவாடச் சடைதாழ வங்கையிலன லேந்தி*
*யிரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே.*

திருச்சிற்றம்பலம்

III சீன்

குபேரன் கைலைக்குச் சமீபமான வழிதெரியாமல் ஸ்தோத்தரித்தல்

குபேரன் : ஏ, பகவன், கைலாசநாதா சிவகாருண்ய மூர்த்தியே. சிவபெருமானே. இது என்ன எந்தவழிப் போவதென்றும் எனக்குப் புரியவில்லையே. ஆ என்ன செய்வேன். அடியேனை சேற்றிலழுந்திய யானையைக் கரையிலெடுத்து விடுவதைப் போல் அஞ்ஞானத்திலிருந்து ஞானமாங் கரையேற்றி அருளும் சிவபெருமானே, உன்னைப் புகழ்ந்து பேசவும் போற்றவும் நான் அறியேன். ஏ, சங்கரா உமையாளோடும் கூடிய சதாசிவா நான் என்ன என்று பிரலாபிப்பேன். பிறை சூடிய பெருமானே.

தேவாரம்

*பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா*
*எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை*
*வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய்*
*நல்லூருட் டுறையுள்*
*அத்தாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே.*

தங்களுடைய நேயத்தை அல்லாது மற்றது
எதை ஊர்ச்சிதமாய் நினைப்பேன் சுவாமி.
ஆ, கடவுளே!

### திருவேகம்ப மாலை

*நல்லாரி ணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே*
*யல்லாது வேறுநிலை யுளதோ வகமும் பொருளு*
*மில்லாளும் சுற்றமும் மைந்தரும் வாழ்வு மெழிலுடம்பு*
*மெல்லாம் வெளிமயக்கே யிறைவா கச்சியே கம்பனே.*

ஆ, ஆ, இதென்ன சோதிமகிமை. ஆ, ஆ
செகதீசா தயாநிதியே, அரோகரா, கண்டேன்
கண்டேன்.

### அருட் பத்து

*சோதியே சுடரே சூழொளி விளக்கே*
*சுரிகுழற் பணைமுலை மடந்தை*
*பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்*
*பங்கயத் தயனு மாலறியா*
*நீதியே செல்வத் திருப்பெருந் துறையி*
*னிறைமலர் குருந்த மேவியசீ*
*ராதியே யடியே னாதரித் தழைத்தா*
*லதந்து வேயென் றருளாயே.*

அரோகரா, அரோகரா,

திருச்சிற்றம்பலம்.

என் அப்பனே என் செய்வேன், எல்லோரும் ஒன்றாய் கூடி மறைந்தனரே என் செய்வேன். என் விண்ணப்பத்தை என்னவென்று கேட்கக்கூடாதா. ஏ, செகதீஸ்வரா அல்லது சுவாமின் என்னை வரும்படியாகச் சொன்ன நீங்களாகிலும் என் பேரில் கிருபை கூர்ந்து ஈசனுக்குச் சிபாரிசு செய்யக் கூடாதா? ஏ, பிரம்மன், சதுர்முக நாயகா? உனக்காகிலும் தயவில்லையா? ஐயோ, என்ன செய்வேன். இருக்கட்டும். ஏ, மாயவா, மகாருண நிதியாகிய மாயவதாரா! உமக்காகிலும் என்பேரில் அருளில்லையா? என்னுடைய விஸ்வாஸத்தைச் சாட்சாத் செகதீஸ் வரனுக்குத் தெரிவிக்கக் கூடாதா. அந்த காலத்தில் கெசேந்திரன் ஏ, ஆதி மூலமே, என்றழைத்ததும் ஆபத் ரட்சகனாய் வந்துகாத்து இரட்சித்தீரே. திரௌபதி, சபையில் தன்னை மானபங்கம் செய்த போது ஏ, பரமாத்மா, தீனபந்து எனக் கதறின போது அந்தப் பதிவிரதை மானத்தைக் காப்பாற்ற கலையை வளரச் செய்தீரே. ஏ, குணத் ரட்சகா, இப்படி

எல்லாம் தாங்கள் எல்லோரையும் காத்துயிருக்க, என்பேரில் கிருபை வராத காரணம்? பிரசைகள் உய்யும் படிக்கு அனுக்கிரகம் செய்யக்கூடாதா? ஐயோ! யாரை வேண்டியும் என்னைப் பரிசோதிக்கிறார்களே. ஏ, கங்கையைச் சடையில் தரித்த கங்கா அவதாரனே, இன்னம் பாராமுகமா? காட்டூர் கடலே.

## தேவாரம்

*காட்டூர்க் கடலேகடம் பூர்மலையே காணப் பேரூராய்*
*கோட்டூர் கொழுந்தே யழுந்தூ ரரசேகொழுநற்*
*கொல்லேறே*
*பாட்டூர் பலரும்பர வப்படுவாய் பனங்காட் டூரானே*
*மாட்டூ ரறவாமறவா துன்னைப் பாடப் பணியாயே*

ஆதரவற்ற யென்னை இரட்சியும், இரட்சியும், எனக்குத் தங்களைத்தவிர வேறொரு பற்றுங்கிடையாது. ஐயோ என் செய்வேன்?

## தேவாரம்

*மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்*
*பாத மேமனம் பாவித்தேன்*
*பெற்ற லும்பிறந் தேன் இனிப்பிற*
*வாத தன்மைவந் தெய்தினேன்*

*கற்ற வர்தொழு தேத்தும் சீர்க்கறை*
*யூரில் பாண்டிக் கொடுமுடி*
*நற்ற வாஉனை நான்ம றக்கினும்*
*சொல்லும்நா நமச்சி வாயவே*

ஆ! இப்படியும் செய்யலாமா? இதுவும் உமக்கு ஞாயமா! நான் கதறுவது உமக்குத் திருவுளச்சம்மத மாகவில்லையோ. "ஒருவர், கல்லாலெறியவும், பிரம்பால் அடிக்கவும், வில்லால் தாக்கவும் ஈடுபட்ட என்னையனே" சற்று கவனியும் இரக்கம் வையும், என் அப்பனே, ஏ, பரப்பிரம்ம சொரூப, கைலாச நாதா, ஒருவேளை தங்களை மாத்திரம் கோறுகிறனே தவிர அம்பாளாகிய செகதீஸ்வரியைப் போற்றவில்லை யென்கிற கோபமோ நான் அறியேன். இதோ என்னை அனுக்கிரகிக்க.

தேவாரம்

*மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்*
*போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்*
*யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது*
*காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்*

கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். இன்னும் கிருபையில்லையா பரமேகா, மன்னிக்கவும், என்னைப் பாரும் என்னோடு பேசும்.

பராபரக் கண்ணி

*பாராயோ என்னைமுகம் பார்த்தொரு கால்என்கவலை*
*தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே.*

ஏ, கடவுளே மன்னிக்கவும் பேசும், பேசும், சுவாமி பேசும், செகதீசா பேசும்.

*அசரீரி* : குபேரா, உன்னுடைய பக்திக்கு மெச்சினோம். அஞ்சாதே. நீ கோரியதை தாம் நிறைவேற்றுவோம். இப்பவும் நமது விஸ்வ கர்மாவைக் கொண்டு பூலோகத்தின் வடதிக்கில் ஒரு பட்டினம் ஏற்படுத்தி அதில் ஒரு தேவாலயம் புதுப்பித்து அதின் மூலஸ்தானத்தில் பூமியில் சில திரவியங்களையும் விலையுயர்ந்த ரத்தினங் களையும், நிரப்பி அதன்பேரில் ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து அதன் கீழ் (யாரொருவன் நிறைந்த பௌர்ணமி கூடிய சோமவார சுபதினத்தில் இராத்திரி பனிரெண்டு மணிக்கு நல்ல பிராமணகுலத்திற் றுற்பவித்த பிள்ளையைத் தாயார் தலையைப் பிடிக்கவும் தகப்பனார் காலைப் பிடிக்கவும்

பிள்ளையைக் கவிழ்த்துப் பிடரியை வாளினால் ஒரு, ஒரு அறுப்பாய் பஞ்சாட் சரத்தைச் செபித்துக்கொண்டு குரல் வழி வரையில் அறுத்து அந்த உதிரத்தை நமக்கு புரோக்ஷிக்கிறானோ அவன் இதன் அடியிலுள்ள திரவியத்தை அடையலாம் என்று சிலாசாசனம் எழுதிவை. ஆசீர்வதித்தோம், குபேரா அதுபோல் செய். ஆசீர்வாதம்.

குபேரன் : அப்படியே திருச்சிற்றம்பலம். சேவகா என்ன? என்னோடு கூடவாயிருக்கிறாய் போவோம் வா, அடே சேவகா, இது என்ன பிரதேசம் போலிருக்கிறானே, நித்திரையா? எழுந்திரு, அடே எழுந்திரு.

சேவகன் : என்ன சுவாமி ஆ, ஆ. கைலாசநாதா அப்பனே, ஏ, பிரபு.

குபேரன் : என்ன பிதற்றுகிறாய்?

சேவகன் : சுவாமி நானா பிதற்றுகிறேன். "ஐயோ"

குபேரன் : என்னடா, எதிர்த்துப் பேசுகிறாய். நித்திரையோ?

சேவகன் : "ஏக நித்திரை சுவாமி, ஏகநித்திரை, கண்டறியாத நித்திரை" ஒருவரும் கண்டிருக்கமாட்டார்கள்.

குபேரன் : அதென்ன நித்திரையடா?

சேவகன் : சுவாமி, என்ன சொல்லப்போகிறேன். தாங்கள் பகவானுடைய திருநாமங்களையும் அவருடைய மகிமையையும் சொல்லி பிரலாபித்துக் கொண்டிருந்தீரே. அதை நான் இங்கே உட்கார்ந்து கேட்டுக் கொண்டேயிருந்தேன். அப்போது மெய் மறந்து ஒரு நித்திரை வந்தது. அதுதான், அதன்பின் இந்த உலக வாழ்க்கையின் குணமே தோற்றமாய் வேறு வேறு விதமாய் கைலாயத்தில் மும்மூர்த்திகள் தம்பதிசமேதராய் வினாயகர், ஆறுமுகக் கடவுள், பிரங்கி, தும்புரி, நாரதர், இன்னம் சிவகணங்கள் புடை சூழ பல, பல விதமான காட்சிகளைக் கண்டேன்.

குபேரன் : ஆ இதென்ன? நித்திரையா? யோக நித்திரையப்பா? பிரிங்கியைக் கூடவா கண்டாய் அவர் மூன்று காலுடனே இல்லை?

சேவகன் : ஆம், சுவாமி அவர்தான் ஞனமென்பதையே சிரேஷ்டமாக வகித்து, மாயையை விலகச் செய்தவராம். அவரிடத்தில்தான் மாயை யணுகாதாம். அந்த ஒரு காலைத் தூக்கி நடமாடுவதையும் கண்டேன். அங்கே

குபேரன் எங்கேயென்று கேட்டார் நாரதர். இதோ வெளியில் என்றேன். உடனே அசரீரி அனுப்பினார்கள். இதற்குள் நீங்கள் எழுப்பிவிட்டீர்கள். இல்லாவிடில் இன்னம் என்ன நடக்கிறதோ அதையும் அறிவேன்.

குபேரன் : ஆ! அப்படியா, சேவகா, ஆ, ஆ, என்செய்வேன் இந்த சேவகனிடத்திலிருந்த நடுநிலையான பக்திகூட நம்மிடத்தில் இல்லாமல் போச்சே. ஆ! கடவுளே இருந்தாலும் அவன் நாம் பகவானை ஸ்தோத்தரிக்கும்போது அதையே ஊக்கமாய் கேட்டு ஞானத்தையடைந்து நடுநிலையில் இருந்து பகவானுடைய நேயத்தை அடைந்தான். அவன் புண்ணிய பூர்வ புண்ணியமே, புண்ணியம். ஆ! செகதீசா இப்போது தானறிந்தேன். யாராக இருந்தாலும் மறுமைக்கும் இப்போதே தங்களுடைய அருளைத் தேடவேண்டும் என்பதை மேலும் என்னுடைய வேண்டுகோள் பிறருக்கே.

சேவகன் : ஆம், ஆம் சுவாமி. நீர் பிரசைகள் மாயாசம் பந்தத்திலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று இட்டீரே தவிர தாங்களுய்யும்படியான வழியைக் கேளாமற் போனீர். அதனால்தான் அவர்கள் உம்மிடத்தில் நேராகப் பேசிவில்லை.

குபேரன் : ஆம், அப்பா, உனக்கு உன் குடும்பத்தைக் காப்பாற்றுவது ஒரு கஷ்டம். அது நிறைவேறினால் யாதொரு கஷ்டமும் கிடையாது. மேலும் நீ சேவகன் உனக்கு. எஜமான் பெரியவர். அது கடந்தால் பகவான் பெரியவர் மற்றெதையும் கோரப் போகிறவனல்ல. ஆனால் நானோ அப்படியல்ல. நான் எப்பொழுதும் செல்வத்திற்கு அதிபதியாக இருக்கிறேனோ! அப்போது பிரஜைகளினுடைய சௌக்கியத்தைக் கோரவேண்டியதுதானே, அப்பா, எனது கடமை எல்லோரும் நம்பியிருக்கிறார்களே.

சேவகன் : ஆம், சுவாமி தம்மை நம்பினவர்கள் எப்படி போவார்கள். தெரியாமற்சொல்லிவிட்டேன். மன்னிக்கவும் இருந்தாலும் நான் தங்களால் பரமாத்ம பக்தியென்பதையும் அறிந்தேன், நம்பினவர்களைக் கெடுக்கக் கூடாதென்றும் அறிந்தேன் சுவாமி.

குபேரன் : வா. நமது லோகம் போவோம். சேவகா, அப்பா, நாம் போய் பகவான் உத்தரவின் பிரகாரம் பூலோகத்தில் நடத்தி வைப்போம்.

சேவகன் : சுவாமி, நாம் எப்போது இப்பேர்க் கொத்த காட்சி காணப்போகிறோம். இங்கேயே இருந்து விடலாமா என்கிற எண்ணம் பிறக்கிறது.

குபேரன் : அப்பா, சேவகா, காட்டிற்குச் சென்றால் வீட்டில் யார்? என்று கேட்ட உனக்கு, என்ன பக்தி உண்டு பண்ணி விட்டாரப்பா! பகவான். இருந்தாலும் நீ எங்கு வேணுமென்றாலும் இருந்து நடுநிலையறிந்து பக்தி செய்வாயேயானால் அந்தக் காட்சி எங்கும் கிடைக்குமப்பா.

சேவகன் : சுவாமிகள், அப்படியா? அதையும் தங்களால் அறிந்தேன். ஆனால் அப்படியே போவோம். நமது லோகம். சிவ, சிவ, சிவ.

குபேரன் : ஆ, என்ன பக்தி, இவன் பக்தி, இவனுடைய பரிபக்குவமான ஞானம் தனக்குத்தானே உதித்தது. பார்த்தனையா? நிஷ்டை இன்னும் அப்படியே இருப்பானாகில் நடுநிலையிலிருந்து நேயத்தையடைந்து தேசோன்மயத்தில் கலந்திடுவன் எல்லாம் அவரருளே.

### தேவாரம்

*தலையே நீவணங் காய்தலை மாலை தலைக்கணிந்து*
*தலையா லேபலித் தேருதலைவனைத் தலையே*
*நீவணங்காய்*
*தேடிக் கண்டுகொண் டேன்திரு மாலோடு நான்முகனும்*
*தேடித் தேடொணாத் தேவனை யென்றுளேதேடிக்*
*கண்டுகொண்டேன்.*

திருச்சிற்றம்பலம்

II அங்கம் I சீன்

(சோமேசய்யரும் அவர் பெண்சாதி பங்கசநயனி அம்மாளும், பிள்ளை லிங்கேசனும் தங்கள் கஷ்டத்தினால் வீட்டை விட்டு வெளியூருக்குப் புறப்படல்)

ப.நயனி : ஏன் சுவாமி? முகம் வேறுபட்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறீர். தேவஸ்தானத்திற்குப் போகவில்லையா? என்ன சமாச்சாரம்?

சோ.ஐயர் : என்னடி செய்வேன் வேலைபோய் நாலைந்து நாள் ஆய்விட்டது ஆத்துக்காரி அதிருஷ்ட மிருந்தாலல்லவோ வேலை நிலைக்கும்?

ப.நயனி : சுவாமி, யார் யார் எவ்வளவு கொடுத்து வைத்தோமோ அவ்வளவுதான் பகவான் அருள். வேலை போவதற்குக் காரணம்?

சோ.ஐயர் : வேலைப் போவதற்குக் காரணம் என்ன சொல்லுகிறது. முக்கியம் நம்ம குற்றமே. அவ்வாள் குற்றம் கொஞ்சம். ஏனென்றால் தேவஸ்தானத்தில் அதிகாரிகள் புதிது புதிதாய் ஏற்படுகிறார்கள். அவ்வாளுக்கு நமது குணம் பிடிக்கவில்லை.

ப.நயனி : வாஸ்தவமே தாங்கள் அடிக்கடி நின்று, நின்று போனதால் அவர்களுக்குப் பிடிக்காதுதான். வேறெங்கே யாகிலும் அலுவல் பார்த்தீரா?

சோ.ஐயர் : என்னடி செய்வேன்? எங்கே எங்கேயோ சென்று கஷ்டப்பட்டு யார் யாரை விசாரித்தாலும் இந்த, வேலையிருக்கிறது வா என்று சொல்பவரில்லை. மேலும் திரேகமோ வசமாயில்லை. அடிக்கடி தொந்தரவு செய்கிறது. நேற்றிலிருந்து கைகால் ஓச்சல் வேறு, விதவிதமான நோய் என்னடி செய்வேன்?

ப.நயனி : ஐயோ? அப்போது சொன்னால் கேட்டீரா? இப்போது சங்கடப் படுகிறீர். என்ன செய்கிறது? பெரியவாள் சம்பாதித்த பொருளையும் கையில் இருந்த காசையும் பலவிதமாய் அழித்து நிர்பாக்கியமாய் விட்டீர். இப்பவும் இந்த பிள்ளைக்குக் கால் அணா கடன் கேட்டால் ஒருவர் நமக்கு கூடி கொடுக்க யோக்கயிதையில்லை. வேறொரு கெதியுமில்லை, இனி கடவுளே. இருந்தாலும் சுவாமி இந்த பிள்ளைக்காகிலும் சிலவுக்கு வேண்டுமா? வேண்டாமா?

சோ.ஐயர் : யாரையாகிலும் கொண்டு வேலை விசாரிக்க வேண்டும்.

ப.நயனி : எப்போது விசாரிப்பது? வெளியே போய் விசாரித்தால் தானே. போய் விசாரியும். ஆத்திலேயேயிருந்தால் ஆய்விடுமா வேலை? போம், போம்.

சோ.ஐயர் : என்னடி நான் போய் விசாரிக்காமலா யிருக்கிறேன்? நேற்று கூட பக்கத்து ஆத்து சாமாசாஸ்திரியைக் கண்டேன். அவர் இன்றைக்கு வந்து தெரிவிக்கிறதாய் சொன்னார். நீ என்னமோ எனக்குத் தெரியாதது போல் கோபிக்கிறாயே. துஷ்டே, பேசாமயிரு.

ப.நயனி : நான் கோபிக்கவில்லை. உங்களுக்குத்தான் கோபம் விபரீதமாய் வருகிறது. ஆம், வராதா? முன்னே காசெடுத்துப் போய் சிலவிட்டபோது வந்த கோபத்தைக் காட்டிலும் அதிகமாகத்தான் வரும். அதில் என்னயிருக்கிறது கோபம் பிறப்பதில். இப்போது அன்னத்துக்குக் கூடக் கஷ்டமாயிருக்கிறதே அதை கவனியும். கோபம் வந்துதான் பிறர்சொல்லைக் கவனியாமல் இவ்வளவு கஷ்டத்தை அனுபவிக்கிறது. அப்போது கூடயிருந்து

சில விட்டவர்களும் வாங்கிக்கொண்ட தச்சி சாரிகளும் இப்போது கால்காசு கேட்டால் கொடுப்பார்களா? அதை நீர் தெரிந்து கொள்ளும் பிறரைத் தூஷிக்காதீர். அதுவும் முடைய பிராரத்துவம். யார் என்ன செய்கிறது?

சோ.ஐயர் : என்னடி இது சங்கதி? எப்போது பார்த்தாலும் ஏசிகாட்டுகிறாயே. இதற்குத்தான் இங்குவரக்கூடாது என்றிருந்தேன். வந்தால் இந்த கஷ்டம் வெளியில் போனால் பெரியோர்கள் ஏன் அப்பா உமது தகப்பனார் கவர்தையோடுங்கூடி, சீவனம் செய்து சொத்துக்கள் சம்பாதித்து வைத்தாரே. அது எப்படி போய்விட்டது? ஏதாகிலும் வர்த்தகம் செய்தீரா? மற்றபடி எப்படி போனவிதம் தெரியவில்லையே? வர்த்தகம் செய்தால் ஒருக்கால் நஷ்டம் வருவதுண்டு. நீர் தேவஸ்தானத்தில் மணிய வேலையில் தானிருக்கிறீர் என்று கேள்விக் கேட்கிறார்கள். மேலும் வேலைபோய் விட்டது என்று தெரிந்துவிட்டால் என்ன மதிப்பார்கள்? மதிப்பது ஒருபுறம் இருந்தாலும் பதில் சொல்வது பெருங் கஷ்டமாயிருக்கும்.

ஆ, செகதீசா, என்ன விதிவிதித்தனீர். ஊரான் மதியாமலும் பெண்சாதி யேசவும், பிள்ளை பாலுக்குக்கதறவும் திரேகம் அசௌக்கியத்தை யடையவும் செகதீசா.

ப.நயனி : கடவுள் என்ன செய்வார்? அவரை நோவதில் பயனென்ன? நாம் தேடிக் கொண்டது. நாம் விபரீதவேலைக்குப் போகாமலும் பக்தி விஸ்வாசத்துடன் பொறுமையாய் இல்லாமற் போனால் எல்லாம் வந்து வாய்க்கும்.

சோ.ஐயர் : அப்படியில்லாமல் என்னடி தவறு செய்து விட்டார்கள். அப்பா, பெரியகஷ்டம். இந்த ஆத்துக்காரி கஷ்டம்.

ப.நயனி : ஆனால் சும்மா உட்கார்ந்திரும். போசனம் ஆய்விடும்.

சோ.ஐயர் : மறுபடிபார். பேசுகிறாள் என்னமோ? பெரிய கவலை இந்த ஆத்துக்காரி கவலை.

ப.நயனி : அதற்கென்ன செய்கிறது. ஒரு ஆத்துக்காரியை மாங்கல்யோதாரணம் செய்யாமலும் குழந்தையைப் பெற்றுக் கொள்ளாமல் இருக்கிறது.

சோ.ஐயர் : அடி இப்படியெல்லாம் பேசினால் ஏகாங்கியாய் வேஷ்டி போட்டுக்கொண்டு போய்விடுவேன்.

ப.நயனி : அப்போது கூட விடாது, உம்மைப் பிடித்தது. நிதானியும். ஆனால் பிழைக்க மாட்டோமா? ஏன் இப்படி அவசரமாய் பேசுகிறீர். சுவாமி பெரும் கோபம் வேண்டாம்.

சோ.ஐயர் : என்னடி, பொறும். இதைக்காட்டிலும் எங்கேயாகிலும் அக்ஷய பாத்திரமெடுத்துப் பிழைக்கலாம். மடப்பள்ளி வேலை கூட அகப்படவில்லையே? நம்ம அதிருஷ்டம்.

ப.நயனி : ஆம், ரொம்ப சரி. அக்ஷய பாத்திரந்தான் எடுக்க வேண்டும். நீர் கொடுத்ததெல்லாம் போய், நீர் ஒருவரைக் கேட்பது நல்ல மாதிரி.

சோ.ஐயர் : என்னடி, அக்ஷய பாத்திரமெடுத்தால், நீ சொல்வது தெரியவில்லையே.

ப.நயனி : செய்யும், செய்யும். அதுவும் இந்த ஊரிலேயேதான் செய்யவேண்டும். ஒழுங்காயிருக்கும்.

சோ.ஐயர் : என்னடி, இதோ போறேன் அக்ஷய பாத்திரம் எடுப்பதற்கு.

ப.நயனி : எங்கே, கொடும். அந்த பாத்திரத்தை, அதைக்காட்டிலும் எங்கே யாகிலும் அடிமைப்படலாம். பேசாமயிரும்.

மணியக்காரன் பெண்சாதி என்பது போய் பிச்சைக்காரன் பெண்சாதி என்று சொல்லப் போகிறார்.

சோ.ஐயர் : அதிலென்னடி மானம். திருடினால்தான் மானம். ஒருவன் பெண்சாதியைக் கைப்பிடித்தால் மானம். நம்ம வயிர் வளர்க்க நூறும் செய்யலாம்.

ப.நயனி : ஊரிலுள்ளோரெல்லாம் மேலுக்குப் போக யோசிப்பார்கள் நீர் கீழுக்குப் போக யோசிக்கிறீரே? ரொம்ப நன்றாய் இருக்கிறது.

சோ.ஐயர் : ஆனால் என்னடி செய்கிறது. உன் தாயாராத்திலே யாகிலும் போய் இரண்டொரு மாதம் கழித்து வரலாமா?

ப.நயனி : அங்கே போவதைக் காட்டிலும் எல்லாம் ஒன்று சேர்ந்து உயிர் விடுவதே நலம்.

சோ.ஐயர் : என்னடி தாயாரைக் காட்டிலும் அன்போடு கூடிய பிராணி ஒருவர் நமக்கு யார்? அப்படிச் சொன்னாயே?

ப.நயனி : ஆம், என் தகப்பனார் யிருக்கிறார்? எல்லாம் நாலு காசோடு இருந்தால் தான் எல்லாவித மரியாதையும். ஏன் வயிற்றெரிச்சலைத் தூண்டுகிறீர்?

சோ.ஐயர் : இப்படி வா, அடி சேஷி. நான் சொல்வதைக் கேள். இப்பவா நமக்கு சீவனம் கிடைக்கவில்லை. நாளைய தினம் கடன்காரருக்கு எல்லாவித சொத்துக்களையும் ஒப்புவித்து விட வேண்டிய வேளை வந்து விட்டது. நாமிங்கிருந்து அல்லல் படுவதைக் காட்டிலும் வெளியூருக்காகிலும் போகலாமா? அப்படி வெளியே போனால் எந்தவிதத்திலும் சீவனம் செய்யலாம். வாழ்வு சில காலம், தாழ்வு சிலகாலம். அதற்கென்னடி யோசனை. நீ நல்ல புத்திசாலியல்ல. சொல் சேக்ஷி சொல்.

ப.நயனி : அப்படி வேணுமானால் செய்யலாம். அதுவும் நம்ம ஊர்ப்பக்கம் தெற்கே போவது சரியல்ல. வடக்கே போவதே சரி.

சோ.ஐயர் : ஆனால், அப்படியே போவோமா? புறப்படு. நான் போய் கடன்காரர்களுக்கு எல்லாம் பதில் சொல்விட்டு சொத்துக்-களையும் ஒப்புவித்து வருகிறேன். சாக்கிரதையாயிரு. அதிகாலையில் புறப்படவேண்டும்.

புறப்படல்

ப.நயனி : கைலாயநாதா, சர்வேஸா, எங்களுக்கு இந்த விதி விட்டாயே. போய் வருகிறோம்.

நீயே துணை சுவாமின், மூட்டையை எடுத்துக்கொள்ளும். பாத்திரத்தைத்தாரும் பிள்ளையைப் பிடித்துக்கொள்ளும். பகவானே நீயே துணை.

தாயுமானவர்

*தந்தை தாயுநீ யென்னுயிர்த் துணையுநீ*
*சஞ்ச லமது தீர்க்க*
*வந்த தேசிக வடிவுநீ யுனையலான்*
*மற்றொரு துணை காணேன்*
*அந்த மாதியு மளப்பெருஞ் சோதியே*
*யாதியே யடியார் தம்*
*சிந்தை மேவிய தாயுமான வனெனுஞ்*
*சிரகிரிப் பெருமானே.*

திருச்சிற்றம்பலம்

சோ.ஐயர் : ஏங்காணும், இது என்ன ஊர்?

குடியானவன் : இதுவா. தானேஸ்வரம்

சோ.ஐயர் : அக்ரஹாரம் எங்கே? எங்கிருக்கு?

குடியானவன் : அதென்னமோ? போ, போ.

சோ.ஐயர் : என்னடா? போ, போ என்று அவமரியாதையாய், பேசுகிறாய்.

குடியானவன் : என்னையா சொன்னேன். ரொம்ப சாஸ்தியாய் பேசுகிறாயே அடா, புடா

என்று சாக்கிரதை தெரியுமா? மூட்டை பத்திரம். நீ பத்திரம். உன் பெண்டாட்டிப் பிள்ளை பத்திரம். சாக்கிரதையாய் ஊர் போய் சேரு.

சோ.ஐயர் : என்னடா? சூத்திரப்பயல் அவ்வளவு பேசுகிறாயே.

குடியானவன்: நீ யென்ன பார்ப்பானா? எங்கேவா போரே.

சோ.ஐயர் : என்னடா, பயலே. பாரிப்போ மதிகெட்ட-பயல்.

ப.நயனி : என்னப்பா, சண்டைக்கு வருகிறாய். நாங்கள் என்னமோ சிவனார்த்தமாக போகிறோம். எங்களுடைய கர்மத்தை ஒழிக்க. ஏன் வீணாய் கோபிக்கிறாய்? ஏதோ, பிராமணாள் வீடு எங்கிருக்கிறது என்று கேட்டாரே தவிர வேறொன்றும் கேட்க வில்லையே.

குடியானவன்: அப்படி கேட்டால் சொல்ல மாட்டேனா? அதைவிட்டு என்னென்னமோ பேசுகிறாரே. அதோ இருக்கிறது அந்த கோயிலின் பக்கத்தில் அநேக வீடு.

ப.நயனி : அப்படியே போகிறோம். நீ போய்வா அப்பா. ஐய்யரே, கோபத்தை விடும் நமக்கு

இனிமேல் கோபம் வேண்டாம். நாம் பிழைக்கமாட்டோம். தெரியுமா? கவனத்தில் வைய்யும்.

சோ.ஐயர் : நான் என்னடி சொன்னேன், அப்படி துள்ளுகிறானே மடப்பயல்.

ப.நயனி : போதும் விடும். அது என்ன? அக்ரஹாரம் போலிருக்கிறது. வாரும் அங்கே போவோம். எவரைக் கண்டாலும் மெள்ள வார்த்தையாடும். நம்ம ஊரல்ல. மணியம் அதிகாரம் இங்கேயில்லை. நாம் நம்மை வொரு துரும்புபோல் எண்ண வேண்டியது. மேலும் ஒருவரை வேலைக்குப்போய் கண்டால் கூட நயந்து பேசும். ஒருக்கால் இவரென்ன இவ்வளவு அவசரமாய் பேசுகிறாரே, இவர் வேலைப்பார்ப்பாரோ என்னவோ? என்று எண்ணுவார்கள். நற்சாட்சி பத்திரமும் உங்களிடத்திலில்லை போவோம் அங்கு விசாரிப்போம்.

## II. சீன்

(தனேஸ்வரன் கோயிலில் மந்திரியை வினவுதல்)

தனேஸ்வரன்: மந்திரி, நாம் முன்னொரு நாள் தரிசனைக்கு வந்தபோது இது என்ன சிவலிங்கத்தின் கீழ் என்னமோ சிலாசனம் எழுதி

வைத்திருக்கிறதே என்று கேட்டேன். அதற்கு பதில் சொல்லவில்லை. இப்போதாகிலும் தெரிவி மந்திரி.

மந்திரி : என்ன சுவாமி?

தேவாரம்

*பவனமாய்ச் சோடையாய் நாவெழாப் பஞ்சுதோய்ச்*
*சட்டவுண்டு*
*சிவனதாள் சிந்தியாப் பேதைமார் போலநீ*
*வெள்கினாயே*
*கவனமாய்ப் பாய்வதோர் ஏறுகந்து ஏறிய காளகண்டன்*
*அவனது ஆரூர்தொழுது உய்யலாம் மையல்கொண்டு*
*அஞ்சல்நெஞ்சே.*

தனேஸ்வரன்: மந்திரி, என்ன நான் கேட்பது கவனிக்க வில்லையா. தியானமோ.

மந்திரி : என்ன சுவாமி?

தேவாரம்

*கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்*
*தந்தையார் போயினார் தாயாரும் போயினார்*
*தாழம்போவார்*
*எந்தநாள் வாழ்வதற்கே மனம்வத்தியா லேழை னெஞ்சே*
*யந்தணா ரூர்தொழுதுய் யலாமையல் கொண் டஞ்*
*சனெஞ்சே.*

அரசே, ஏன் அதை கவனிக்க வேண்டும். தாங்கள் அதைவிட்டு பகவானை ஸ்தோத்திரியும். அரசே செய்யும்.

தனேஸ்வரன் : அதிருக்கட்டும் ஸ்தோத்தரிக்கலாம் நான் அதை அறிந்துகொள்ள வேண்டும். சொல் சீக்கிரம்.

மந்திரி : அரசே, இப்போது தாங்கள் கேட்பதைத் தெரிவிக்கத் தடையில்லை. அது ஒருவிதமான மாயாசம்பந்தத்தின் ஆசைக்குப் பாத்திரமானது. ஆனதினால் அதைத் தாங்கள் கவனிக்கக்கூடாது.

தனேஸ்வரன் : ஏன்? அப்படி சொல்லுகிறாய்? உலகத்தில் உள்ள ஒவ்வொரு விவகாரத்தையும் அரசனானவன் கவனிக்க வேண்டியது தானே. ஏன் தெரிவிக்க மாட்டேன் என்கிறாய். ஒளிக்காமல் சீக்கிரம் சொல். இது உனக்கு ஞாயமல்ல. தெரியாததைத் தெரியச் சொல்பவனல்லவோ மந்திரி.

மந்திரி : தாங்கள் என்னை வற்புறுத்துவதினால் தெரிவிக்கிறேன். கோபம் வேண்டாம் அரசே.

தனேஸ்வரன் : ஆனால் சொல்.

மந்திரி : அரசே, மனிதர்கள் கலியுகத்தில் அதிக ஆசையினால் மனவாட்டமுற்று பொருளையே முன்னிட்டு அநேக பாபக்கிர்த்தியங்களைச் செய்வார்களென்று குபேரன் மும்மூர்த்திகளையும் வேண்ட, அதற்கு ஈசுவரன் இம்மாதிரியாக கோயில் அமைத்து லிங்கத்தை பிரதிஷ்டைச் செய்து அதன் கீழ் இந்த மாதிரி சிலாசனம் எழுதி வைத்தால் தரிசனைக்கு வரும் சனங்கள் இதை வாசித்துப் பார்த்து இப்பேர்க் கொத்த காரியத்தைச் செய்து பொருளை அடைய வேண்டியதா? என்ற ஆசையை நீக்கி குற்றங்களின்றி அதிலிருந்து விசாரணையில் திரும்புவார்கள். அதைவிட்டு இந்த காரியத்தில் ஈடுபடுவார்களேயானால் பகவான் சோதனைக்கு உள்ளாவதுந் தவிர சிகைஷயும் அடைவார்கள் என்று அருளியபடி, குபேரனால் முடிக்கப்பட்ட ஆலயமும் இந்த சிலாசனமும்.

தனேஸ்வரன் : மந்திரி, சரிதான். இப்போது இந்த காரியத்தை செய்து திரவியத்தை அடைய வேண்டுமா? என்று சொன்னாயே. அது என்ன? சொல் அந்த காரியத்தை விவரிப்பாய்.

மந்திரி : அதுவா? பிரம்ம அத்தி செய்ய வேண்டும் சிவ, சிவா.

தனேஸ்வரன் : பிராமணனைப் பலிகொடுக்க வேண்டுமா? அதற்கென்ன? நம்மிடத்தில் எவ்வளவோ பிராமணரிருக்கிறார்கள். ஒன்றுக்கு பத்து, நூறு, ஆயிரங்கணக்காய். செய்தால் போச்சு இதற்கென்ன? செய்து விடலாம் மந்திரி.

மந்திரி : அரசே, அப்படியல்ல, நல்ல தேயறுசு பொருந்திய சிறு பிள்ளையாயிருக்க வேண்டும். அதிலேயும் தாயார் தலைப் பிடிக்கவும் தகப்பன் காலைப்பிடிக்கவும் நல்ல பௌர்ணமி கூடிய சுப சோமவார தினத்திலே இராத்திரி பனிரெண்டு மணிக்கு பஞ்சாட்சர செபத்தை செபித்துக்கொண்டு.

தனேஸ்வரன் : என்ன, என்ன? பஞ்சாட்சர செபத்தை அதன் பின்.

மந்திரி : செபித்துக் கொண்டு.....

தனேஸ்வரன் : பஞ்சாட்சரசெபம், பஞ்சாட்சர செபம். அதாவது ஓம் நம சிவாயா, ஓம் நம சிவாயா இதுவும் பஞ்சாட்சர செபந்தானே. ஆகட்டும். பிற்பாடு, நமசிவாயா, சிவாய நமா.

மந்திரி : செபித்துக் கொண்டு பிள்ளையைக் கவிழ்த்து பிடரியைக் குரல்வழி வரையில் ஒரு ஒரு அறுப்பாய் அறுத்து அதன் உதிரத்தை லிங்கத்தின் சிரசில் புரோஷிக்க வேண்டும்.

தனேஸ்வரன் : மந்திரி இதற்கென்ன? சுலபமான காரியம்தான். குரல் வழியில் அறுப்பதா யிருந்தால்தான் இறந்திடுவன். பிடரியைத் தானே அறுக்கவேண்டும். பிள்ளைப் பிழைத்தாலும் பிழைத்திடுவன். ஏன் இது செய்யக்கூடாது மந்திரி?

மந்திரி : அரசே, இது ஏற்பட்டு எவ்வளவோ காலமாய்விட்டது. இது வரையில் ஒருவரும் இதை யோசித்ததில்லை.

தனேஸ்வரன் : மந்திரி, நீ சொன்னது சரிதான் அவர்களுக்கு மும்மாரி பெய்துக்கொண்டும் ஊரில் எல்லாவித சுகபோகங்கள் குறைவின்றியும் தேசச் செழிப்பும் விசேஷதிரவியத்தையும் அடைந்திருந்ததினால் இதைக் கவனிக்க வில்லை.

மந்திரி : அரசே, மும்மாரியும், பொருள் அதிகமும், சுகபோகங்களும் எல்லாம் யாரால் உண்டாகிறது. நமது இராஜ்யத்தில்

பக்தியும், ஓமமும், தர்மமும் குறைவின்றி நடப்பதால் தானே. இதுகள் குன்றும் பட்சத்தில் நமது இராஜ்யம் க்ஷிணித்து ஊரிலுள்ளோரெல்லாம் பிணியைக் குடிகொண்டு தரித்திரியத்தை யடைந்து கஷ்டப்படுவார்கள். அது குறைவாய் நடப்பது அரசனுக்குத் தெரிந்தும் அதை விசேஷமாய் நடத்தி வைக்க வேண்டும் என்கிற எண்ணத்தை வகிக்காமல் போவானேயாகில் இராசாங்கத்தில் கலகம் பிறப்பதும் தவிர, பகையையும் உண்டு பண்ணுவாரீசன். ஆனதினால்தான் எப்போதும் அரசர்கள் கல்வி தேர்ச்சியடைந்து ஞானத்தைச் சேகரித்து, தர்மத்தைச் செய்து பொறுமையை வகித்து, பரமாத்ம பக்திக் கிடுபட்டு, நடுவுநிலையறிந்து மனுநீதி தவறாமல் பகைவருக்குச் சமர்த்தனாய் செங்கோல் புரிய வேண்டும். அரசன் இதுதான் உத்தமம். அரசர்களுக்கு நீதி. இதை அனுஷ்டிப்பானேயாகில் மேன்மேலும் சுகத்தை யடைவான் அரசன். ஆனதினால் தாங்கள் அதைக் கோருவதை விட்டு இதைக்கோருவது ஞாயமல்ல. மேலும் சிலாசனத்தின் காரியத்தைச் செய்யும் பட்சத்தில் தண்டிப்பார் கடவுள்.

தனேஸ்வரன் : அது ஏன்? அவரே இந்த மாதிரி சிலாசனம் எழுதி வைக்க உத்தரவு செய்கிறது. அவரே தண்டிக்கிறது. இது என்ன ஞாயம்?

மந்திரி : வாஸ்தவந்தான். பகவானானவர் பூலோகத்தில் நல்ல பதார்த்ததையும் படைத்திருக்கிறார். விஷமுள்ள பதார்த்தையும் படைத்திருக்கிறார். அது எப்படி, எப்படி உபயோகிக்க வேண்டுமோ அதை பூலோகத்தில் உள்ள-வர்கள் பகுத்தறிந்துக்கொள்ள வேண்டும். அதெப்படியென்றால் கண்ணுக்கு குளிர்ச்சியாயும் அழகாயுமிருக்கிறது ஒருபச்சிலை. அதைத்தின்றால் கொன்றுவிடும். அதைத் தின்னலாமா?

தனேஸ்வரன் : ஆம், நீ சொல்வது சரியே. அதற்கு சிலாசனம் இல்லை. ஒருவித உபயோகப்பட்டது என்பது வேறு.

மந்திரி : சிலாசனம் இல்லாததை மனிதர்கள் ஞானத்தால் அறியும்போது அதையேன் அறியக்கூடாது. செய்யத்தாகாதது என்று?

தனேஸ்வரன் : நிசம்தான். ஒருவன் ஒரு பொருளை ஆண்டு பார்த்தாலல்லவோ தெரியும் தேங்காய் தித்திப்பென்றும், மாங்காய் புளிப்பென்றும்.

மந்திரி : எது ஒருவனுக்குச் சுலபமாய் காட்டுகிறதோ அதுவெல்லாம் கஷ்டமானதே. எது ஒருவனுக்குக் கஷ்டமாய் தோன்றுகிறதோ அதுயெல்லாம் சுகத்தை விளைவிப்பதே. அதற்கு திருஷ்டாந்திரம் ஒருவன் குரடுகட்டி அறுத்தவுடனே உண்ணலாம் மாங்காயோ தேங்காயோ அப்படியல்ல. ஒருவனைத் தேடவேண்டும். நாரைவேறு பிரிக்க வேண்டும். அதன்பின் காயை உடைக்க வேண்டும். சூந்தி தின்ன வேண்டும். அப்போது தெரியும் தேங்காயின் தித்திப்பும், மாங்காயின் புளிப்பும். அதுபோலும் இப்போது நினைத்த காரியம் தங்களுக்குச் சுலபமாயிருந்தாலும் அதைவிடுத்து கஷ்டமாயிருக்கக் கூடிய ஞானமார்க்கத்தை யடையும்படியான ஏதுவைத் தேடுங்கள்.

தனேஸ்வரன் : ஞானமார்க்கத்தை அடைந்தால் அது என்ன செய்யும்?

மந்திரி : முத்தி நிலையில் கொண்டுபோய் விடும். அரசே.

தனேஸ்வரன் : ஏன் பரதேசியாய்த் திரிவதற்கா?

மந்திரி : அரசே பரதேசியாய் திரிவானேன்? ஞான மார்க்கத்தை யடைந்து இராச காரியத்திலேயே யிருக்கலாமே. பரதேசியாய் போனால்தானா முத்தி?

தனேஸ்வரன்: அப்படி பரதேசியாகாமல் முத்தியடைந்தவர்களுண்டா? மந்திரி.

மந்திரி : அரசே, அனேகம் பேர்.

தனேஸ்வரன்: எதோ, சொல் பார்ப்போம்.

மந்திரி : அரசே, திரு அண்ணாமலையில் பிரக்கியாதி பெற்ற வல்லாள மகாராச னென்ன, சிறுத்தொண்டனென்ன இயற்பகை நாயனாரென்ன, இவர்களுடைய சலிஸ்தாரங்களை நாம் கேட்டும் வாசித்தும் இல்லையா? ஏன் அரசே?

தனேஸ்வரன்: மந்திரி பேஷ்! இப்போது கொடுத்த சமாதானம் இருக்கிறதே அது ரொம்பவும் சரியானதே. நன்றாயிருக்கிறது. ஏனென்றால் வல்லாள மகாராசன் தன் மனைவியை ஒரு கன்னியாசியின் இச்சையை நிறைவேற்ற அனுப்பினான். சிறுத்தொண்டனோ பிள்ளையை அறுத்துக் கறிசமைத்து வைத்தான். இயற்பகை நாயனாரோ பெண்சாதியை ஒரு விட புருஷனோடு அனுப்பினான் இதுவெல்லாம் ஒரு சமாதானமா? இது நீதியா?

மந்திரி : அரசே அவர்கள் பொருள் வேண்டுமென்று கோரிக்கையைக் கொண்டு செய்தவர்கள் அல்ல. ஆனால் அவர்களோ, இல்லறத்திலிருந்தே எல்லாவற்றையும் பற்றறுத்தவர்கள்.

ஆனதினால் யாவர் எதைக்கேட்டாலும் கொடுப்போமென்று நிர்ணயம் செய்த-தினாலும் பகவானுக்குப் பிரீதியான அடியவர்கள் தங்கள் இடத்திலிருந்த பொருளையே கேட்டதினாலும் சத்தியம் தவறா வண்ணம் கொடுத்து முத்தியைக் கோரி, அப்படியே பகவானும் அனுகிரகித்தார். மேலும் நீர் அதுபோலும் இந்த மாயா சம்பந்தத்திலிருக்கும் படியான ஆசையை விலக்கி நற்கதியை யடையும் படியான ஏதுவைத் தேடவேண்டும்.

தனேஸ்வரன் : வாஸ்தவந்தான். முன்னமே பெரியோர் பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை யென்றும் சொல்லியிருக்கின்றார்களே. அப்போது பொருள்தான் இவ்வுலகத்து சிரேஷ்டம் என்று நினைக்கிறேன்.

மந்திரி : அரசே, இந்த செல்வமிருக்கிறதே இது அறிவில்லானிடத்திலேயும் உண்டு. ஆனால் அதுவோ அவனுடைய கிருபையுள்ளவர்கள் இடத்தில்தான் இருக்கும். அதுதான் நிலையான செல்வம். இது அழியும் செல்வம். சற்று கவனித்து இதோ நமது பெரியோர்கள் தேடி வைத்த சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்து கொல்லாவிரதத்தைப் பூண்டு சுகப்பட்டு முத்தியைத் தேடும்.

தனேஸ்வரன்: மந்திரி, அப்படி அது பெருத்த காரியம். மேலும் தற்சமயம் சௌக்கியத்தைக் கொடுக்கக் கூடியதல்ல. ஆனதினால் நீ சொல்வதை நாம் எடுத்துக்கொள்ள மாட்டோம். நாம் செய்துதான் தீருவோம்.

மந்திரி : அரசே, அப்படி சொல்லக்கூடாது. ஆசையால் கெட்டவர்கள் அனேகம்பேர். சற்று கவனியும். அதிலேயும் அத்தி செய்து பெறவேண்டிய பொருளாசை மிகவும் கொடிது. அதனால்தான் திருவள்ளுவர்

*"அறிவினை யாதெனிற் கொல்லாமை கோறல்*
*பிறிவினை யெல்லாம் தரும்"*

கொலை செய்யாமையே தருமச் செயல். அப்படி செயின் எல்லாவித பாவத்தையும் உண்டு பண்ணும். ஆனதினால் இது எல்லாம்விட்டு, பகவானை நல்ல புஷ்பங்களிலேயும் அலங்கரித்து அவருக்கு நல்ல விலையுயர்ந்த ஆடையாபரணம் தரித்து பலவிதமான நற்குணச் செய்கைகளைச் செய்து ஸ்தோத்தரியும். அது இம்மைக்கும் மறுமைக்கும் நல்லதே. நமக்கு வேண்டியதைக் கொடுப்பார் பகவான்.

தனேஸ்வரன் : ஏ, மந்திரி, என்ன நீ இன்னம் ஏதேதோ தடுத்துப் பேசிக்கொண்டிருக்கிறாய். போ, போ.

மந்திரி : ஐயோ! தாயுமானவர் சொல்லியிருக்கிறாரே. அதையாகிலும் கவனிக்கக்கூடாதா? நாம் சொன்னதை எடுத்துக்கொள்ளாவிட்டாலும்

*"கற்றுணர்ந்த மெய்யடியார் சொல்லாலே*
*நின்னைத் தொடர்ந்தேன் பராபரமே"*

என்று அதுகளை யாகிலும் எடுத்து வாசிக்கக்கூடாதா? பொருளைக் காட்டிலும் அருள் பெரிதன்று. அரசே! இந்த ஆசையை விடும், விடும், அவர் பக்தியைத் தொடரும் அரசே.

தனேஸ்வரன் : என்ன, நான் இவ்வளவு தூரம் சொல்லியும், கற்றதையெல்லாம் பதில் பேசுகிறாய்? போ, சேவகா! கொண்டு போ. வெளியே கொண்டு போய் நமது கோட்டைக்குச் சுற்றிலுமுள்ள அகழியைத்தாண்டி நாலு மதில் கெவுனிக்கு அப்பால் விட்டுவர வேண்டியது. போ! சீக்கிரம் கொண்டு போ.

சேவகன் : வாரும் சுவாமி. என்ன செய்யலாம் செங்கோலுக்கு மிந்தினது வேறொன்றும் கிடையாது.

மந்திரி : மன்னவர்க்கழகு செங்கோல் முறைமை. மந்திரிக்கழகு வரும் பொருளுரைத்தல் இதற்கு ஈடுபடாத அரசனும் மந்திரியும் ஒன்று வாழ்தலில் என்ன பிரயோசனம் ஆன்றோர் வாக்கியத்தின் பிரகாசம் கொடுங்கோல் மரிமன்னர்கீழ் வாழ்தலின்று என்று நமக்குத் தெரியும். இருந்தாலும் அவர் நம்மை இகழ்ந்து விட்ட போதினும் ஏ, செகதீசா, ஆசையைச் சற்று அரசனுக்கு விலகச் செய்யும். எப்பொழுது நமக்கு இந்த மாதிரியான கஷ்டத்தை உண்டு பண்ணிவிட்டாரோ பகவான், அப்பொழுதே நாம் சுகப்பட்டோம். இது வரையிலும் இராசாங்கத்தின் பற்றுதல் இருந்தது. இனியோ, யாதொரு பற்றும் கிடையாது. நாமும் எதையும் கோர மாட்டோம். இனி நமக்கு யாதும் சதமல்ல.

திருவேகம்ப மாலை

*ஊருஞ் சதமல்ல; உற்றார் சதமல்ல; உற்றுப்பெற்ற*
*பேருஞ் சதமல்ல; பெண்டிர் சதமல்ல; பிள்ளைகளுஞ்*
*சீருஞ் சதமல்ல; செல்வஞ் சதமல்ல; தேசத்திலே*
*யாரும் சதமல்ல; நின்றாள் சதங்கச்சி யேகம்பனே.*

இனி யெல்லோரும் மேன்பட்டவர்களே நமக்கு நல்லதும் கிடையாது, கெட்டதும்

கிடையாது. ஆனால் எவர் ஒருவர் அவனருளில்லா மலிருக்கிறார்களோ அவர்களைப் பகவான் மேன் மேலும் பக்தி செய்ய விருப்பமுடையவர்களாக்க வேணும். அப்படியே நமது அரசனாகிய தனேஸ்வரனைக் காட்டிலிருந்து நீக்கி வீட்டில் விடுவதைப்போல் அந்த அஞ்ஞானமான ஆசையை விலக்கி மெஞ்ஞானமாகிய உமது அருளைத் தாரும். ஏ, பிரபு, ஏ, மகானு பாவா, சம்போ சதாசிவா, சம்போ சங்கரா, கெங்காதரா,

திருச்சிற்றம்பலம்.

III சீன்

(அரசன், பங்கசநயனியம்மாளையும் பிள்ளையையும் கோயிலில் காண்பது)

ப.நயனி : ஆ, பரமேசா. செகத்ரட்சகா? ஏ, பரஞ்சோதி சர்வசம்பூர்ண நித்திய சர்வமங்கள சர்வா பிஷேக சர்வப் பிரகாசமாய் விளங்கும் தீனதயாபதியே உமாபதியே. சுத்த சுகவடிவமான பிரம்மமே. யான் என்ன செய்வேன். இப்பவும் யான்படும்படியான கஷ்டத்தைத் தீர்க்க உமக்கிரக்கமில்லையா? இந்த குட்சிப் பாதையை நீ அறிய வில்லையா? யான் எதைக் கோரப்

போகிறேன் சுவாமி? என் விண்ணப்பத்தைச் சற்று ஏற்றுக்கொள்ளக் கூடாதா? எப்போது உன்சித்தம் கிருபை கூடுமோ? அறியேன்.

தேவாரம்

*துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்*
*நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்*
*வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்*
*றஞ்சவு தைத்தன வஞ்செ ழுத்துமே.*

அப்பனே எங்களுக்கு, எப்பேர்க் கொத்த கஷ்டம் வந்தபோதிலும் உன் திரு நாமத்தையும் பாதார விந்தத்தையும் ஒருக்காலு மறக்க மாட்டோம்.

தேவாரம்

*காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி*
*ஓது வார்தமை நன்னெறிக்கு உய்ப்பது*
*வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது*
*நாதன் நாமம் நமச்சி வாயவே.*

ஏ, சுவாமிகள் என்ன பாவம் செய்தோம். இப்பேர்க் கொத்த கஷ்டத்தை அடைகிறோமே.

சேவகன் : அம்மா, ஆரது? அரசன் வருகிறார் அல்லது மூலஸ்தானத்தினுள்ளே போ. அம்மணி, போ.

தனேஸ்வரன்: என்னடா பிராமணாள். அவர்களிடத்தில் பேச்சு. அம்மா யார்? தரிசனை செய்யுங்கள். இது யாருடையபிள்ளை? உங்கள் பிள்ளை தானா? இவன் ஒருவன் தானோ? நல்ல தேககசுயுடையவன். நல்லபுத்திசாலி என்ன உங்களுக்கு கஷ்டம்? இவ்வளவு வருத்தத் தோடுங் கூடியிருக்கிறீர்களே. சொல்லுங்கள் தான் உங்கள் உடன் பிறந்தவன் போல பயப்பட வேண்டாம். சொல்லுங்கள் அம்மா. யான் அரசன். ஊரிலுள்ளவர்கள் யாராகிலும் துயருற்றால் கேட்பது என் கடமை.

ப.நயனி : அரசே, எங்கள் குறையை என்னவென்று சொல்வோம்? எல்லாம் இதோ யிருக்கும் படியான தானேஸ்வரருக்குத்தான் தெரியும்.

தனேஸ்வரன்: அம்மணி, நீங்கள் அஞ்சவேண்டாம். தனேஸ்வரரே உங்களுக்குக் கிருபை செய்வாராக. நான் கேட்பதற்கு பதில் சொல்லுங்கள். பிள்ளை யார்? நீங்கள் யார்? உங்கள் பர்த்தா எங்கே? எனக்குத் தெரியச் சொல்லுங்கள்.

சேவகன் : அம்மா, சொல் அம்மா, பாதகமில்லை சொல். நல்ல மகான் ஒருவர் சங்கடப் பட்டால் மனந்தாளார். இந்தவூர் ஆளப்பட்ட

மன்னாதி மன்னன். சொல்லுங்கள் அம்மணி சொல்லுங்கள்.

ப.நயனி : அரசே இது என் பிள்ளை பேர் லிங்கேஸன். நாங்கள் தஞ்சாவூர் ஜில்லா. இருப்பது திருவையாறு. எங்கள் கஷ்டத்தினால் இங்கு வந்து என்னுடைய பர்த்தாவுக்கு வேலை சிக்காமல் ரொம்ப கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

தனேஸ்வரன் : இப்போ, எங்கே குடியிருக்கிறீர்கள்?

ப.நயனி : அரசே, இந்த கோயிலுக்கு வடக்கிலுள்ள அக்ரஹாரத்தில் சுந்தரேச அய்யர் ஆத்துக்குப் பக்கத்து ஆத்தில் ரேழியிலிருந்துக் கொண்டிருக்கிறோம்.

தனேஸ்வரன் : சேவகா, சரியாக விசாரி. இந்த பிள்ளை பேர் லிங்கேசனா? நல்ல பேர் அமைத்தது.

சேவகன் : அம்மணி, அது எங்கே இந்த பக்கத்து தெருவில் சுந்தரேச ஐய்யர் வீட்டுக்குப் பக்கத்துவீடா? ஓ, ஓ, தெருவில் சார்மனை உயர்த்திக்கட்டி அறை தடுத்து பந்தலிட்டு இருக்கிறதே அங்கே தானே?

ப.நயனி : ஆம் அப்பா ஆம்.

தனேஸ்வரன் : சேவகா, தெரிந்து கொண்டனையா?

சேவகன் : சுவாமிகள், தெரிந்து கொண்டேன்.

தனேஸ்வரன்: ரொம்பசரி, இப்பொழுது காலம் கழிப்பது கஷ்டமோ? ஏன் அம்மணி சொல்லுங்கள்.

ப.நயனி : ஆம், அரசே.

தனேஸ்வரன்: இதோ, இது நவரத்தின கதாதாவடம் இதைக் கொடுக்கிறேன். உங்கள் பர்த்தா விடத்தில் கொடுத்து தனுவிக்கிரயம் செய்து உண்டு உடுத்து காலம் கழியுங்கள். இதற்குள் தகுந்த வேலையை நான் தெரிவிக்கிறேன்.

குருக்கள் : அம்மணி, வாங்கிக் கொள்ளுங்கள்.

ப.நயனி : அப்படியே, சுவாமி.

தனேஸ்வரன்: சேவகா, நாம் போவோம், வா

ப.நயனி : ஆ, சுவாமி, தனேஸ்வரரே என்ன பெருமை, உங்களுடைய பெருமையை நான் என்ன வென்று சொல்வேன். நான்கோரியதை ஈடேற்றினீரே. நான் செய்த பாக்கியமே பாக்கியம். மேலும் இந்த அரசனோ தன்னியன் என்ன தயாளு குணத்தை வாய்ந்தவன். ஆ, பரமேசா, உமக்கு பேர் அமச்சுதே, அதுவே போதும். தனேஸ்வர சுவாமி என்றும், தனேஸ்வர மகாராசா என்றும்.

சோ.ஐயர் : என்ன ஆத்துக்காரி, போய் என்னேர மாயிற்று. இன்னும் வரக்காணோமே, எங்கு அவள்? எப்படி பார்ப்போம். அதென்ன கண்கூசுதே. ஆ, ஒரு வேளை மல்லிய புஷ்பமா? அதைக் கழுத்தில் போடுவானேன். சிரசில் அல்லவா வைப்பாள். வெண்மையாயிருக்கிறதே. அதென்னடி? அடி பஞ்சகநயனி, சொலி-க்கிறதே கழுத்தில் சொலிக்கிறது ஏதோ? பார்ப்போம் எதோ? ஏதிது சொல்?

பி.லிங்கேசன்: அப்பா, அம்மா கோயிலுக்குப்போய் விசனமாய் பக்திசெய்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அரசன், தான் உன் உடன் பிறந்தவன் என்று சொல்லி, ரொம்பவும் தயவாயிதைக் கொடுத்தார். அங்கிருந்தவர்கள் வாங்கிக்கொள்ளும்படி சொன்னார்கள். அதன் பிறகு அம்மாள் வாங்கிக் கொண்டதும் இதை வைத்துக்கொண்டு காலங் கழியுங்கள். நான் உன்னுடைய பர்த்தாவுக்கு வேலைப் பார்த்துச் சொல்லியனுப்புகிறேன் என்று சொன்னார். நம்ம கஷ்டத்தை எல்லாம் நன்றாக விசாரித்து இதை விக்கிரயம் செய்து சீவனம் செய்யச் சொன்னார்.

ப.நயனி : ஆம் ஐயரே. இதைக் கொண்டுபோய் கிரயம் செய்து வாரும்.

சோ.ஐயர் : ஏதோ, ஏதோ கழட்டு, கொண்டுவா சீக்கிரம் இதோ கிரயம் செய்து வாரேன் சிலவு கூட வாங்கிவரட்டுமா? ஏண்டி நாளைக்குப் போகச்சே நானும் வாரேன். நமக்குப் பகவான் அனுக்கிரகம்தான் வேணும். அதனால்தான் அரசன் நம்மை கவனிக்கும்படி நேரிட்டது. தெரியுமா? அரசன் என்னைக் கேட்டாரோ, இல்லையோ? நான் வரதடையென்ன?

ப.நயனி : சரி போய் வாரும். பிற்பாடு பேசிக் கொள்வோம்.

சோ.ஐயர் : நான் கடைக்குப் போய் வருகிறேன். பையன் பத்திரம்.

சேவகன் : அம்மணி, உங்களை உங்கள் ஐயரோடு சாயந்திரம் கோவிலுக்கு வரும்படி அரசன் கட்டளையாயிருக்கிறது. சீக்கிரம் இருவரும் வாருங்கள்.

ப.நயனி : அப்படியே வருகிறோம். அரசனுக்கு வந்தனம் சொல்லப்பா. ஐய்யரே உங்களையும் என்னையும் அரசர் வரச் சொன்னாராம். ஆனதினால் சேவகன் வந்திருக்கிறார். அரசனுக்கு வந்தனம் சொல்லி யனுப்பும்.

சோ.ஐயர் : என்ன, என்ன! இப்பவா, இப்பவா அப்பா வரச் சொன்னார்.

சேவகன் : இப்போதல்ல சுவாமி, சாயந்திரம் சுவாமி கோயிலண்டை.

சோ.ஐயர் : அப்படியே வருகிறோம். அரசனைத் தனேஸ்வரர் காத்து இரட்சிப்பாராக, ஆசீர்வாதம் சொன்னேனென்று சொல் அரசனுக்கு.

(கோயிலுக்கு தம்பதிகளும் போதல்)

சோ.ஐயர் : என்னடி, நான் வாங்கிக் கொண்டு வந்தேனே வேஷ்டி, சேலை, அதை எடு, அதை எடு, ஏனென்றால் அவர் முன்னிலையில் பழையபடி போவது உசிதமல்ல. சீக்கிரம் புறப்படு. அவர் கொடுத்ததற்கு அவர் மனமாகிலும் திருப்தியாகட்டும். பகவா-னுக்கும் பார்ப்பதற்கு வைதீகமாயிருக்கட்டும்.

ப.நயனி : அது தானே, உம்மிடத்தில் பார்ப்பதற்கு ஏது காரியம். பகவான் விஷயத்தில் பார்ப்பதற்கே செய்கிறவரே தவிர ஒவ்வொரு காரியமும் உள்ளன்பென்பது சற்றேனும் கிடையாதே உமக்கு.

சோ.ஐயர் : அதென்னடி, அப்படி சொன்னே!

ப.நயனி : நேற்றையதினம் அதற்கு முந்தினதினம் அழைத்தேனே அப்போது பகவான் பேரில் பிரேமையாய் வந்தீரா? இப்போது வெகு உன்னதமாய் புறப்பட்டீரோ?

சோ.ஐயர் : எல்லாம் உன்னுடைய பாக்கியம் நான் முன்னமே சொன்னேனே வேலைப் போனபோதே எல்லாம் ஆத்துக்காரி அதிருஷ்டம் என்று.

ப.நயனி : அப்படி சொல்லாதீர், இனி ஒரு விசை எல்லாம் அந்த தனேஸ்வரர் அருள்யென்று சொல்லும்.

சோ.ஐயர் : ஆம், ஆம், புத்தி, புத்தி.

ப.நயனி : போவோமா? சரிதானா?

சோ.ஐயர் : ரொம்பசரி ரொம்பசரி, பேஷ், சுகமாகத் தானிருக்கிறது. கடவுள் அனுக்கிரகம் சம்போ, சம்போ, சங்கரா, போவோம்.

கோயிலில்,

ப.நயனி :

*மருவார்க் கொன்றை மதிசூடி*
*மாணிக் கத்தின் மலைப்போல*
*வருவார் விடைமேல் மாதோடு*
*மகிழ்ந்து பூதப் படைசூழ*

*திருமால் பிரமம் இந்திரற்கும்*
*தேவர் நாகர் தானவர்க்கும்*
*பெருமான் கடலூர் மயானத்துப்*
*பெரிய பெருமா னடிகளே.*

ஏ. பகவன், கைலாச நாதா, சம்பு, சம்போ, சதாசிவா.

சோ.ஐயர் : என்னடி இன்னும் அரசனைக்காணோம்.

ப.நயனி : சற்றுபொறும் வருவார்.

சோ.ஐயர் : என்னடி, பையன் தூங்கிவிட்டான் போலிருக்கிறது. அவனை அந்த கஜானா பெட்டியின்பேரில் கிடத்து அதோ வந்துவிட்டார். அவரல்ல? அவர்தான். அரசன் இல்லையோ! அவர் வருகிற ஆடம்பரம் நன்றாய்த் தெரியும்.

ப.நயனி : அவர் வரட்டும் நீர் சுவாமி தரிசனை செய்யும். ஆராதனை நடக்கிறது.

சோ.ஐயர் : ஏ, மகாதேவா தேவாதி தேவா. தேவரட்சகா, சுயம்பிரகாசா, சுத்த சிவவொளியே இரட்சியும் எங்களைக் காப்பாற்றும் பிரம்மஞான சூத்ரதாரியே காப்பாற்றும்.

தனேஸ்வரன் : சுவாமி, கோயில் குருக்களே. அவர்களுக்குப் பிரசாதம் கொடும்.

சோ.ஐயர் : இருக்கட்டும். தாம் வாங்கிக் கொள்வோம். அரசனுக்குக்கொடும், கொடும், மன்னவா, உனக்கு சகல பாக்கியமும் தீர்க்க ஆயுசும் உண்டாகக் கடவது ஆசிர்வதித்தோம்.

தனேஸ்வரன்: சுவாமி, தாங்கள் ஷேமந்தானா, பெண்டு பிள்ளையோடு கஷ்டமில்லையே. நமக்கு நமது இராஜ்யத்தில் ஒருவரும் கஷ்டப்படக் கூடாது என்கிற எண்ணம்.

சோ.ஐயர் : மன்னவா? ஷேமந்தான் உன்னுடைய தயவினால் இப்பவும் சற்று சுமராய் காலம் கழித்து வருகிறோம்.

தனேஸ்வரன்: அதென்ன? சுவாமி தங்களுடைய வார்த்தை தீர்க்கமாய் வரவில்லையே. சௌக்கியமாய் இருக்கிறோமென்று நான் கொடுத்தது விலையுயர்ந்த பொருளாச்சே. என்ன செய்தீர்? எவ்வளவுக்கு தீர்த்தீர்? ஏமாந்திரோ அல்லது என்ன அதன் விபரம், சொல்லும்.

சோ.ஐயர் : மன்னா, அதைநான் கடைத் தெருவில் இருக்கும் படியான தனநிதி செட்டியாரிடத்தில்.....

தனேஸ்வரன்: ஆம், அவர் தகுந்த ஆசாமியே. அவரால்தான் அதை வாங்கமுடியும். அதற்கு முன் ஒருவன் கடை வைத்திருக்கிறான். அவன் அனியாயஸ்தன். பிற்பாடு.

சோ.ஐயர் : தனநிதி செட்டியாரிடத்தில் மூவாயிரம் பவுனுக்கு தீர்மானம் செய்து மோராக் களையும் பெற்றுக்கொண்டு அதில் அண்டை வீட்டுக்காரருக்கு ஆயிரம் பவுன் கடன் கொடுத்தேன். எதிர் வீட்டின்பேரில் ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற் றொன்பது பவுன் கொடுத்தேன். மற்ற மிகுதி ஒரு பவுன் நான் எடுத்துக் கொண்டேன்.

தனேஸ்வரன்: ஆம், சுவாமி உங்கள் மனோ ராஜிய சிலவுக்குத் தானே எடுத்துக் கொள்ளச் சொன்னேன். நீர் ஏதோ வாரி விதைத்து விட்டீரே முழுதிருப்தியாயில்லாமல்.

சோ.ஐயர் : மன்னவனே, இதுவே, போதும், இதுவே போதும், ரொம்ப திருப்தி. எங்களுக்கு என்ன சிலவுயிருக்கிறது? நாங்கள் இரண்டு பிராணிகள் நடுவில் ஒரு பிள்ளை. அற்ப சீவனஸ்தர். எதிர்வீட்டுக்கும் பக்கத்து வீட்டுக்கும் கொடுத்து மிகுந்ததே அதுவே எங்களுக்கு பெரியத்தொகை. அதில் இதோ பாரும் வேஷ்டி. அந்த சேலை, பிள்ளைக்கு சோமன் முதலானதும் வாங்கி சாமக் கிரயங்களும் மற்றும் பத்து பணம் இருக்கிறது. இதுவே பெரிய ஆஸ்தி, அதிக

ஆசைப்பட மாட்டோம். கொடுத்த வரையில் திருப்தி போதும் இருந்தாலும் ஒரு கஷ்டம். அதுதான் என்னைப் பாதித்துக் கொண்டேயிருக்கிறது.

தனேஸ்வரன்: அதென்ன கஷ்டம் சுவாமி? சொல்லுங்கள்.

சோ.ஐயர்: இல்லை. இப்போது நான் சொன்னேன் பாருங்கள் எதிர் வீட்டின் பேரில் கடன் கொடுத்ததாக, அந்த வீடு நமக்கு கிரயத்திற்கு வரும்போல் தோன்றுகிறது. வந்தது போல்தான். தீர்மானமும் செய்திருக்கிறேன். அதற்கு மற்ற மிகுதி ஒரு முன்னூறு பவுன் கிடைத்தால் அதைப் பூர்த்தி செய்து தஸ்தாவேசுகளையும் தேடி விடுவேன் எல்லாம் இந்தப் பிள்ளைக்-காகத்தான்.

ப.நயனி: சுவாமி, இருக்கட்டும். பகவான் கிருபை செய்வார். அவரிடத்தில் நல்ல பேச்சு பேசும். பகவான் பெருமையையும் நமது தேவஸ்தானங்களின் பெருமையையும் தெரியச் சொல்லும். வேதாகம அர்த்தங்களைப் போதியும். நமது கஷ்டத்தைத் தெரிவிக்க இது ஸ்தானமுமல்ல. வேளையுமல்ல. சுவாமி, பக்தியை அவருக்கு உண்டு பண்ணும்.

தனேஸ்வரன்: ஆம், அம்மணி. தாங்கள் சொல்வது உண்மையே. எந்த சங்கதியும் யோசிக்க இது ஸ்தானமல்ல இது தேவஸ்தானம்.

ப.நயனி : இல்லை அரசே, அவர் ஒரு பெரிய தேவஸ்தான மணிய அதிகாரித்திலிருந்தவர். அவர் அங்கு வேறு காரியங்களைப் பற்றி அர்ச்சகர்களையும் பரிச்சாரர்களையும் வேலை வாங்கும் பொருட்டு பேசி வழக்கம். அதுபோலும் இவ்விடத்திலும் பேசுகிறார்.

தனேஸ்வரன்: ஓ, அப்படியோ, சரிதான், அம்மணி சுவாமி, நமது கொலுவுக்கு வாருங்கள். நாளைய தினம் காலையில் பேசிக் கொள்வோம். சேவகா, ஐய்யர் வந்தால் நமது கொலுவுக்கு அழைத்தவா.

சேவகன் : அப்படியே, அரசே.

தனேஸ்வரன்: மேலும் சுவாமி, நான் ஒரு ஏற்பாடு செய்திருக்கிறேன். அதென்ன வென்றால் இப்பவும் நமது ஆளுகையின் உள்பட்ட ஒரு சுரோத்திரியம் ஒன்றிருக்கிறது.

சோ.ஐயர் : என்ன? என்ன?

தனேஸ்வரன்: சுரோத்திரியம்.

சோ.ஐயர் : சுரோத்திரியமா?

தனேஸ்வரன்: ஆம், அந்த சுரோத்திரியதார் இறந்து விட்டார். சந்ததி யாருமில்லை. உறவினரும் யாருமில்லை. ஆனதினால் அதை அவருக்குப்பின் தாங்கள் போய் தமது கட்டளையை வகித்து ஏற்றுக்கொள்ளுங்கள். நாளைய தினம் கொலுவுக்கு வரும்போது எல்லா யேற்பாடும் சொல்லுகிறேன். நேரமாகிறது. போய் வருகிறேன்.

சோ.ஐயர் : மன்னா, அப்படியே செய்யும், அடி போவோமா, வா.

ப.நயனி : அதல்ல சுவாமி, அரசனிடத்தில் கோயிலில் என்ன பேசவேண்டும், வெளியில் என்ன பேசவேண்டும் என்று சற்று கவனித்து வார்த்தையாடும் மன்னர்கள் எப்போதும் பலகவலைகளில் மனதைச் செலுத்தி இருப்பவர்கள். ஆனதினால் ஒருவேளை நற்குணத் தோடுமிருப்பார். தீக்குணத்-தோடும் இருப்பார். நாம் தாம் அதை கவனித்து எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அதையறிந்து கொள்ள வேண்டுமோ அதையறிந்துக் கொள்ள வேண்டுந்தவிர அதிக ஆசையையும் காட்டக்கூடாது.

சோ.ஐயர் : என்னடி நான் பேசினதில் தப்பு பேசினேன். அதுவெல்லாம் யார்யாருக்கு எப்படி நடக்க வேணுமோ அப்படி நடந்து மனுஷாளை வெகுபக்குவமாய் வயப்படுத்துவேன். அது எனக்குத் தெரியும். அப்படியில்லாமலா ஒருவருக்கு ஆயிரம் பொன் கடன் கொடுத்தது, ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றொன்பது பவுன் எதிர் வீட்டின் பேரில் கொடுத்தது, அந்த வீட்டை வாங்க முன்னூறு பவுனுக்கு அரசனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டது. என் அந்தஸ்துக்குத் தகுந்த சுரோத்திரயத்தை யடையப் போகிறது. இது தெரியவில்லையா? நான் என்னமோ பயித்தியக்காரன் என்று நினைத்து விட்டாயே போதும் நிறுத்து.

ப.நயனி : எனக்கு என்னமோ, இப்போது இச்செல்வம் இவ்வளவு அளவு கடந்து பிராப்தமாகிற விஷயத்தில் ஏதோ ஒரு தீவினை விளையும் போல் தோன்றுகிறது. ஏனென்றால் எப்போதும் அரசர்கள் சகல சனங்கள் பேரிலும் பிரீதியாயிருக்க வேண்டியவர்கள் அதைவிட்டு நம்ம அசலூரார் பேரில் இவ்வளவு பிரியத்தைக் காட்டுவது

எதின்பொருட்டோ, பகவான் அறிவாரே தவிர நாம் அறிய சக்தியற்றவர்கள். அவர்தான் துணை.

சோ.ஐயர் : என்னடி, அவர் அரசன், அவர் நினைத்தால் எதைக் கொடுக்கக்கூடாது, யேதோ உளறுகிறாயே. இருக்கட்டும். என்னை வரச் சொன்னாரே கொலுவுக்கு நான் போய் வருகிறேன். சீக்கிரமாய்ப் போகவேணும். இதோபோய் ஒரு நொடியில் சுரோத்திரி-யத்தை அடையும்படியான உடன் படிக்கையையும் அங்கிருப்பவர்கள் நம்பி ஒப்புவிக்கும் படியான சமூகமும் பெற்றுக் கொண்டு வருகிறேன்.

ப.நயனி : ஐய்யரே, கொடுத்த வரையில் திருப்தியாய் வாருங்கள். சீக்கிரம் வாரும். அங்கே ரொம்பவும் நேரமிருக்காதீர். இதை, அதைப் பார்த்துக் கொண்டும், இது என்ன, அது என்ன என்று விசாரித்துக்கொண்டும், அது ராசாங்கம் நம்ம சினேகிதர் வீடல்ல. நம்ம எஜமான் வீடல்ல. ஒன்றைக் கேட்பதற்கும், யாசிப்பதற்கும் தெரியுமா, சீக்கிரம் வாரும்.

சோ.ஐயர் : என்னடி? நான் ராசாங்கம் பார்த்ததில்லையா? கோட்டை பார்த்ததில்லையா? ஒரு தஞ்சாவூர் சமஸ்தானமென்ன, இராமநாதபுரம் சமஸ்-

தானமென்ன, புதுக்கோட்டை சமஸ்தான-மென்ன, சேர, சோழ, பாண்டிய இராசாக்கள் ஆண்டபோது இருந்த ஒரு அந்தஸ்தையும், பார்த்தும், கேட்டுமில்லையா? என்னடி நாம் அந்த இராச்சியத்திலேயே பிறந்து வளர்ந்து இப்படி பேசுகிறாயே. எல்லாவித பக்தவமும் எனக்குத் தெரியும். நீ ஒன்றும் தடுத்துப் பேசாதே.

ப.நயனி : ஏனென்றால் நம்ம அநுபோகம் அவர்களுக்குத் தெரியாது பாரும். போய் வாரும். நானும் ஸ்தானத்திற்குப் போகிறேன்.

III அரங்கம், I சீன்

(பிராமணரும், மனைவியும் சுரோத்திரியத்தை அடைந்தபின் சௌக்கிய மாயிருப்பதும், மறுபடியும் தனேஸ்வரர் கோயிலுக்கு வருவதும்)

சோ.ஐயர் : என்னடி பங்கசநயனி ஏதோ தாம்பூலம். இது என்ன பாக்கு, சீவல் பக்குவமா-யிருக்கிறதே. சீவினது யார்?

ப.நயனி : சுவாமி, இப்போது புதிதாய் வந்தாளே வேலைக்காரி, அவள் கொஞ்சம் கூர்மையுள்ள புத்தியை வகித்தவள். எல்லா காரியமும் அவளிடத்தில் அப்படியே ஒழுங்காயிருக்கிறது.

சோ.ஐயர் : ரொம்ப சரி ஏதோ? ஏதாகிலும் ஒன்று பாடு.

ப.நயனி :

தேவாராம்

*மாதர்ம டப்பிடியும் மடவன்னமும் அன்னதோர்*
*நடையுடைம் மலைமகள் துணையென மகிழ்வர்*
*பூதவி னப்படைநின் றிசைபாடவு மாடுவர்*
*அவர்படர் சடைந்நெடு முடியதொர் புனலர்*
*வேதமொ டேழிசைபா டுவர்ஆழ்கடல் வெண்டிரை*
*யிரைந்துரை கரைபொரு துவிம்மிநின்று அயலே*
*தாதவிழ் புன்னைதயங் குமலர்ச்சிறை வண்டறை*
*எழில்பொழில் குயில்பயில் தருமபு ரம்பதியே.*

சோ.ஐயர் : என்னடி, எப்போதும் இதுவே பாடுகிறாயே எதுவோ, ஒருசாவளி, தில்லானா ஷோக்காய் பாடமாட்டேன் என்கிறாயே ஏண்டி?

ப.நயனி : சுவாமி, நமக்கு என்னத்துக்கு அது சிருங்காரரசம். பக்திரசம் எப்பொழுதும் இருந்தால்போதும். இது நிலைக்கும். அது போய்விடும். இது எப்படி வேணும் என்றாலும் பாடலாம். அது தாளம், மேளம் எல்லாம் வேண்டும். இதற்கு அன்புதான் வேண்டும். மேலும் பரமாத்ம

பக்திக்குச் சிரேஷ்டமாய் பலராலும் எடுத்துப் பாடப்பட்டது. நமக்கும் அது தெரியாது. மன்னியுங்கள்.

சோ.ஐயர் : ஆம், வாஸ்தவந்தான். இருந்தாலும் நான் நம்ம ஊரில், உனக்குத் தெரியுமே. போகிற அவ்வாள் வீடெல்லாம். அங்கே எப்போது பார்த்தாலும் இதுதான் வேலை. சகலவித ஆடல் பாடல்களையும் பார்க்கலாம்.

ப.நயனி : மறுபடியும் அந்த ஆசை வந்துவிட்டது. அதை விடும். இவ்வளவு வயதாயிற்று. நல்ல அந்தஸ்தில் இருக்கிறீர். வேண்டிய சாஸ்திரிகளைக் கொண்டு சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்குறீர். இன்னும் அந்தச் சிற்றின்பம் விட வில்லையே, விடும்.

சோ.ஐயர் : ப.நயனி, அது விடுமா?

ப.நயனி : ஏன் விடாது? பக்தியே பிரதானம் என்றிரும். ஏன் விடாது? எதுவும் அவன் அருள் என்று மனதை ஒரு வழியாய் செலுத்தும். எதிலேயும் அதிக ஆசையை வையாதீர். நாளுக்கு நாள் விலகிவிடும் பாரும்.

சோ.ஐயர் : ப.நயனி, அது இருக்கட்டும். பிற்பாடு பேசுவோம். நாம் தனேஸ்வரம் விட்டுவந்து

நெடுநாளாய் விட்டதே. அந்த ஊருக்குப் போய் எல்லாரையும் விசாரித்து அரசனையும் விசாரித்து நாம் அங்கு வாங்கின வீட்டையும் பார்த்து விட்டு வருவோமா? அதன்பின் பக்கத்தில் இன்னொரு வீடு மனை கோர வேண்டும். அதையும் கிட்டிருந்து செய்து விட்டு வருவோம்.

ப.நயனி : அப்படியே செய்வோம். ஆனால் அந்த வேலைக்கு நம்ம குமாஸ்தாக்களை யனுப்பினால் பார்த்து அடிகோலி வரமாட்டார்களா? இருந்தாலும் நாம் போய் வருவதாயிருந்தால் எவ்வளவு கஷ்டம். இப்போது இருக்கும் படியான அந்தஸ்து போதாதா? இன்னும் அதையிப்படி செய்யவேண்டும். அப்படி செய்யவேண்டு மென்கிறீரே. சுவாமி உமக்கு என்ன வர, வர அதிக ஆசையாய்விட்டது. ஆனால் உங்களிஷ்டம் செய்யும் புறப்படும்.

## II சீன்

(சுரோத்திரியம் அடைந்தபின் பழைய படியே எல்லோரும் அரசனோடு கூட கோயிலுக்கு வருதல்.)

சோ.ஐயர் : அரசே, பிரசாதம் வாங்கிக்கொள்ளும். நான் உம்மிடத்தில் அரண்மனையிலேயே

ஒரு சமாச்சாரம் சொல்லவேண்டும் என்றிருந்தேன். வேறு லோக வியாபாரத்தில் மறந்துவிட்டேன். இப்போது கோயில் உள் நுழைந்ததும் கவனம் வந்தது. அதென்ன வென்றால் ஒரு தேவாலயம் ஒன்று பிரமாண்டமாயிருக்கிறது. அதுதான் ரொம்பவும் க்ஷிணித்து யீன திசையில் பூசை யில்லாமலிருக்கிறது. நமது சுரோத்திர-யத்தில் வேற குறையொன்றும் கிடையாது.

தனேஸ்வரன்: ஆம், வாஸ்தவந்தான். அது எந்த காலத்திலே நடந்த யுத்தங்களில் பிற மதஸ்தன் அந்த சுவாமியைப் பின்னப் படுத்தி விட்டானாம். அதற்குத் தகுந்தாப் போல் பிற்பாடு அந்த இராஜ்யத்தை ஆண்டவர்களும் கவனிக்கவில்லை. அது-போலவே இப்போது நமது ஆளுகைக்கு உட்பட்ட சுரோத்திரமாயும் அதை இதுவரையில் அனுபவித்தவன் பிரமதஸ்-தனாயிருந்து விட்டான். அதற்கு நல்ல காலம் பிறந்து நீர் சுரோத்திரயதாரராய் ஏற்பாடாகவும், அதை கவனிக்கவும் ஏற்பட்டது.

குருக்கள் : அது முன்காலத்தில் எப்போது பூசையானதோ. அந்த சுவாமியின் பேர்கூட நல்லபேர். ஆம்,

சோமநாத சுவாமி. ஏது, தங்களுடைய பேரும் தங்கள் ஊரிலிருக்கும் படியான பகவான் பேரும் ஒன்றாயிருக்கிறதே

சோ.அய்யர், சோமநாத சுவாமி, ஊர் பேரும் அதுவே முன்னே. இப்போ வேறுபேர் என்னமோ சொல்லுகிறார்கள்.

சோ.ஐயர் : அப்படியா? சந்தோஷம். கை கூடும் வேளையில் எல்லாம் ஒன்றாய்த்தான் முடியும். அதைத்தாங்களுக்குத் தெரிவிக்க வேண்டு மென்கிறது அரசே.

தனேஸ்வரன் : ஆனால் அதை நீர் கொஞ்சப் பிரயாசை எடுத்து சுத்தப்படுத்தி கும்பாபிஷேக முதலானதும் செய்துவையும். அதற்குண்டான சிலவுக்கு என்னவேண்டுமோ அவ்வளவும் நமது சுரோத்திரிய குத்தகையில் பிடித்துக் கொள்ளும்.

சோ.ஐயர் : மன்னா, அப்படியே, சந்தோஷம், சந்தோஷம் என்ன பக்தி. என்ன ஞானம், தனேஸ்வரர் இரட்சிப்பாராக.

தனேஸ்வரன் : சுவாமி தாங்களால் எனக்கு ஒரு காரியம் ஆகவேண்டும். அதைத் தங்களுக்கு நெடுநாளாய் தெரிவிக்க வேண்டுமென்கிற கருத்து. அது இன்றைக்குத்தான் தனேஸ்வரர் அருளினால் முடிந்தது போலிருக்கிறது.

சோ.ஐயர் : மன்னா, என்னால் ஆகவேண்டியதா? அதென்ன தெரிவிப்பாய். என் உடல், பொருள், ஆவி, உம்மதே. இதோ தந்தேன். இன்னம் என்னுடைய மனைவி தவிரமற்றது என்னிடத்திலிருக்கும் படியானதை எதைக் கேட்டாலும் தருகிறேன்.

தனேஸ்வரன்: உண்மை தானா? தங்களுடைய மனைவி தவிர மற்றதை எதைக் கேட்டாலும் கொடுப்பது நிச்சயமா?

சோ.ஐயர் : என்னிடத்தில் இல்லாததைக் கேட்டால்?

தனேஸ்வரன்: இல்லை, இல்லை. உம்மிடத்தில் இல்லாததைக் கேட்பேனா? இருப்பதைக் கொடுப்பேனென்பது சாத்தியந்தானா?

சோ.ஐயர் : சாத்தியந்தான். உண்மைதான்.

தனேஸ்வரன்: எந்த தனேஸ்வரர் உங்களுக்குத் திரவியத்தையும் சம்பத்தையும் கொடுத்து இரட்சித்தாரோ அந்த தனேஸ்வர சுவாமி அறிய என்று சொல்லும். ஏதோ பிரமாணிக்கம் செய்யும். சுவாமி, ஏதோ ஆகட்டும்.

சோ.ஐயர் : அப்படியே, தனேஸ்வரர் அறிய, என் மனைவி பங்கசநயனி தவிர என்னிடத்தில் இருக்கும் படியானது எதைக் கேட்டாலும் கொடுக்க நிச்சயித்து பிரமாணிக்கம் செய்து

கொடுத்தேன் தோஷமில்லை என்று சொல்லும் மன்னா, ப.நயனி.

தனேஸ்வரன்: நான் என்ன கேட்கப்போகிறேன். பொருள் வேணுமென்று கேட்கப் போகிறேனா? பூஷணம் வேணுமென்று கேட்கப் போகி-றேனா? எனக்கு என்னமோ ஒரு கோரிக்கை. அதை ஈடேற்றவேணும் என்றுதான்.

சோ.ஐயர்: அதென்ன கோரிக்கை?

தனேஸ்வரன்: இப்படி வாரும் சுவாமி, இப்படி வாரும் இதைப் படியும், படியும்.

சோ.ஐயர்: படித்தேன், படித்தேன். அதற்கு......

தனேஸ்வரன்: பிள்ளையை வருகிறவாரம் இராத்திரிக்கு ஆசர் செய்ய வேண்டியது. தங்கள் பிரமாணத்தின்படி செய்யவேண்டும். அதை மீறினால் ஆணை பிறப்பதுந்தவிர சிறைச் சேதமும் நேரும் நமது கட்டளையின்படி சாக்கிரதை ஆள் அனுப்புவோம். அப்போது ஆசர் ஆக வேண்டியது.

சோ.ஐயர்: ஆ, செகதீசா, என்ன விதி விதித்தனை. ப.நயனி, என்ன செய்வோம். அரசன் ஆக்கினை.

ப.நயனி : சுவாமின், பிராணேசா, பயப்படாதீர் என்ன செய்யலாம். எல்லாம் பகவானுடையக் கட்டளையே. என்ன, அவரில்லாமல் ஒரு அணுகேனும் அசையுமா? அவரும் நாமும் ஒன்றே. மேலும் தாயுமானவர் சொல்லியிருக்கிறாரே.

ஆனந்தமானபரம்

*சுத்தமும் அசுத்தமுந் துக்கசுக மேதமுந்*
*தொந்த முடனிர்த் தொந்தமும்*
*பெத்தமொடு முத்தியும் பாவமோ டபாவமும்*
*பேதமோட பேத நிலையும்*
*பெருமையோடு சிறுமையு மருமையுட னெளிமையும்*
*பெண்ணினு டனாணு மற்றும்*
*நித்தமு மனித்தமு மஞ்சன நிரஞ்சனமும்*
*நிஷ்களமு நிகழ்ச களமும்*
*நீதியு மனீதியு மாதியோட ராதியும்*
*நிர்விஷய விஷய வடிவும்*
*அத்தனையு நீயலதெள் ளத்தனை மில்லையெனின்*
*யரங்களுனை யள்ளி யுண்டோ*
*அண்டப கிரண்டமு மடங்கவோ ருநிறைவாகி*
*யானந்த மான பரமே.*

இது தெரியாதா? அவர் நாமாய், நாம் அவராயிருக்க அப்போது அவர்தான்

துணை. சந்தேகிப் பானேன். அவரேதான் நமக்குப் பிள்ளையைக் காப்பாற்றிக் கொடுக்கப் போகிறார். அவரையே நம்புங்கள். பக்தி பூர்வமாயிருப்போம்.

பாசுரம்

*என்செய் வாலாதியா தொன்று மில்லை*
*யினித்தெய்வமே*
*உன்செய லேயென்று உணரப்பெற் றேனிந்தவூ னெடுத்த*
*பின்செய்த தீவினையா தொன்று மில்லை பிறப்பதற்கு*
*முன்செய்தத் தீவினை யோவிங்க னேவந்து மூண்டதுவே*

என்று முன்னொரு காலத்தில் பட்டினத் தடிகளைக் காத்து இரட்சிக்கவில்லையா? பெரியோர் வாக்கு. பலியாமலா போய்விடும். பயத்தை விடும். சுவாமியைத் தினம் தியானித்துக் கொண்டிரும். அதுவே எல்லாவித சுகபோகங்களும் எல்லா நன்மையும் உண்டாக்கும்.

தனேஸ்வரன்: சேவகா, இவ்வாளை அப்புறப்படுத்து இவர்கள் ஏதோ கலிக்கியானத்தைப் பேசுகிறார்கள்.

ப.நயனி : அரசே, நாங்கள் ஒன்றும் கலிக்கியானத்தைப் பேசவில்லை. ஆனால் கல்வி ஞானத்தைத் தான் பேசுகிறோம்.

சேவகன் : அம்மா, வாருங்கள், வாருங்கள் வெளியே வாருங்கள்.

சோ.ஐயர் : என்னடி சொல்வது. நமது பூர்வகர்மத்தை முன்னே இந்த நகையை விற்கும்போது என்னை அதிகாரிகள் திருடனாக மதித்து தொந்தரவு செய்ய, யாரோ ஒரு மகானுபாவர் இருந்து இவரைப் பார்த்தால் நல்ல வைதீகம் வாய்ந்த பிராமணாரா யிருக்கிறார். இவர் அப்படி செய்ய மாட்டார். ஒருவேளை அவர் சொல்லும் போல் அரசன் சன்மானம் கொடுத்து இருந்தால் இருக்கக்கூடும் என்று சொல்லி மீட்டு அனுப்பினார். அதனால்தான் அன்றைய தினம் அந்நேரமானது.

ப.நயனி : ஆ, அப்படியா சுவாமி.

சோ.ஐயர் : இருக்கட்டும். நான் கூட இப்போதுதான் கொஞ்சம் நிதானித்தேன். அவனன்றி ஓர் அணுவும் அசையாது. பார்ப்போம். நாம் நமது வேதங்களிலேயும் சாஸ்திரங்களி-லேயும் சொல்லியிருக்கும் படியான ஒரு யாகம் ஏதாகிலும் செய்குறேன். இல்லாவிடில் சுலபமாயிருக்கக்கூடிய நவக்கிரக யாகத்தைச் செய்கிறேன். அது சீக்கிரம் முடிந்துவிடும். மேலும் அவன் என்றைக்குக் கோரினானோ

அன்றைக்கே இந்த யாகம் முடிவாகுது. அதோடு தேவதா கோரிக்கையும் செய்கிறேன். பார்ப்போம் இது எப்படி முடியுதென்று. அதுவுமல்லாமல் அந்த அரசன் சொன்னதைப் போல் அந்த கோயிலை இன்றைய தினமுதற்கொண்டே கட்டும்படியான ஏதுவைத் தேடிவிடுகிறேன். அப்படி நம்பிள்ளையின் உயிரைக் காப்பாற்றிக் கொடுக்கும் பட்சத்தில் நான் நாலு கோபுரவாசலுக்கும் தங்க கலசம் செய்து சிகரத்தில் வைக்கிறேன். பகவானே, உன்னைவிட உயர்த்துணை யாரும் கிடையாது. ப.நயனி, நீயும் யாதேனும் ஒரு கோரிக்கை செய்து கொள்.

ப.நயனி : சுவாமி நான் முன்னமே அந்த அரசர் சொல்லும்போதே, உமது வேஷ்டி முந்தையும் எனது சேலையின் முந்தையும் முடியிட்டுக் கொண்டேன். அம்மணி கேதாரி, மகாலக்ஷிமி இப்பவும் எங்களுக்கு வந்திருக்கும்படியான ஆபத்தைத் தீர்க்கும்படி நானும் என் பர்த்தாவுமாக இருந்து இதே பக்தி பூர்வமாய் உன்னுடைய விரதத்தை அனுஷ்டிக்கிறோம் என்று மேலும் அவள் சக்திரூபம் கொண்டால்

இந்த அரசனுடைய மார்பைப் பிளந்திடுவள். நானும் பிள்ளையைக் குறித்து மாயாசக்தி நோன்பு ஒன்று நூற்கிறேன். அந்த சக்தியாகிலும் வந்து அவன் மார்பைப் பிளக்கட்டும். இருந்தாலும் நாம் முன்னமே அந்த ஆர்வத்தைக் கொடுத்தேனே அதோடு போயிருக்க வேண்டும்.

சோ.ஐயர் : நாம் என்ன அரசன் தானேயென்று பார்த்தோம். எல்லாத்துக்கும் பொதுவில் பகவானொருத்தர் இருக்கிறார். நமக்குக் கிடைத்த திரவியத்தை யெல்லாம் அவர் விஷயத்தில் செய்யவேண்டிய யாகத்திற்கும் நோன்புக்கும் மற்று எல்லாவித தர்மத்துக்குமே சிலவிடுவோம். எப்படி நமது பிள்ளையைப் பகவான் காப்பாற்றிக் கொடுக்காமற் போய்விடுகிறாரோ பார்ப்போம். சுரோத்திரியத்திற்குப் போவோம். நாம் கோரியதையெல்லாம் செய்வோம். (சுரோத்திரியத்திற்கு வெட்டியான் வந்து சங்கதி தெரிவித்தல்.)

வெட்டியான் : ஓய், சுவாமி, ஏ சாமி சுரோத்திரியந்தாரரே, ஐயரே, அரசன் ஆக்கினை வந்திருக்கிறது. உடனே புறப்படும். நீர், சமுசாரம், பிள்ளை மூன்று பேரும் பிள்ளையை ஆஜர்படுத்த.

சோ.ஐயர் : அப்படியே, போ அப்பா. என்ன செய்வேன் ப.நயனி?

வெட்டியான்: இதோ விட்டுவிட்டு போரேன் கொலைஞர்களை நீங்கள் போகாமலிருந்தால் உங்களை உற்று நைந்து சிறைச்சேதம் செய்வார்கள் சாக்கிரதை.

ப.நயனி : சுவாமி, பயப்படாதீர். வாருங்கள் பகவான் கூடவாயில்லை. அங்கேயேதான் பகவானிருக்கிறாரே. நாம், நமது பிரமாணத்தைக் காப்பாற்றுவதும் தவிர, அந்த அரசன் இந்த மாதிரியான காரியத்தைச் செய்யத் துணிந்தானே அதையும் நமது தேவதா கோரிக்கையினால் அவனைவிட்டு விலகும்படியாகவும் ஸ்தோத்தரிப்போம். எப்படியான போதிலும் நம்மை பகவான் கவனிப்பார். பிள்ளையையும் காப்பாற்றிக் கொடுப்பார் வாரும் சுவாமி, வாரும்.

பி.லிங்கேசன்: என்ன அம்மா? இந்த இராத்திரியில் எங்கு போகிறீர். கோயிலுக்கா? அரசன் கூட வருகிறாரே. அது என்ன கையில் வாள்? ஏன் அம்மா வாள். இந்த இராத்திரியில் அரசன் எடுத்துக்கொண்டு வருகிறாரே. இது என்ன நீர் விசனமுற்று சும்மாயிருக்கிறீரே. நான் யாதொரு தப்பும் செய்யவில்லையே.

உங்களுடைய வார்த்தை உள்ளங்கணம் செய்யவில்லையே அம்மா. அப்பா, நீர் கூட சும்மாயிருக்கிறீரே. இது என்ன ஆச்சரியம், யாதொன்றும் புலப்பட-வில்லையே. என்ன விளையுமோ? அரசே! மகாராசாவே, ஐயா, நாங்கள் என்ன செய்தோம். என்னத்துக்கு வாள் தங்கள் கையில் இந்த ராத்திரியில், மேலும் அம்மாவும், அப்பாவும் விசனமாயிருக்-கிறார்களே. அதற்குத் தகுந்தாப் போல் நீரும் சும்மாயிருக்கிறீரே. இது என்ன யாரை யென்ன செய்யப்போகிறீர். நீங்களெல்லாம் ஒரு மனதாயிருப்பதைப் பார்த்தால் ஏதாகிலும் தீங்கு எனக்குத்தான் விளைவிப் பார்கள்போல் தோன்றுகிறது. அப்படித்தான் நினைக்கிறேன்.

ஐயா, அரசே, நான் என்ன அபராதம் செய்தேன்? வேறு சிட்சையில்லையா? கோயிலில் தானா இந்த காரியம்? பதில் காணோமே. சரி, இனி இவர்களை வேண்டுவதில் என்ன? பக்தர்களுக்குப் பரமசிவன்தான் துணை. ஏ, சங்கரா, மகாதேவா, இரட்சகா என்னை ரட்சியும் மார்கண்டேயருக்கு ஆயுளைக் கொடுத்த

மகாருணநிதியே, ஒரு வேளை பானாசுரனைக் காப்பாற்றிக் கொடுப்பதாய் தீர்மானித்து மகாவிஷ்ணுவினுடைய மாயாஸ்திரத்தினால் சொக்கிவிட்டீரே. அப்படி சொக்கியிருக்கிறீரோ. அந்த மாயையாகிலும் வந்து ரட்சிக்கட்டும். ஏ, பகவதி, சக்தி சொரூபி இரட்சி.

தனேஸ்வரன் : வாருங்கள் கோயிலுனுள். சேவகா உள் பிராகாரத்தைத் தாளிடு.

(பார்வதிக்கும் ஈஸ்வரனுக்கும் தர்க்கம்)

பரமசிவன் : அடி நில், பார்வதி நில் ஏ மாயை நில், பொரு, பொரு.

பார்வதி : ஏ, பகவன் இது என்ன உமக்கு ஞாயமா. பிள்ளை தவிப்பது சற்று மனமிரக்க மில்லையா? சண்டாளன் உமக்கு உசிதமா? உதிரம் என்பது உமக்கு அமிர்தமா? கிருபையில்லையா? நமது பிள்ளைகளான முருகனுக்கும், வினாயகனுக்கும் யாராகிலும் இப்பேர்க்கொத்தக் கெடுதி செய்தால் சும்மா யிருப்பீரா? இன்னும் சும்மாயிருக்கிறீரே. ஓ தங்களுக்கு இது காரியம் சம்மதமாயிருந்தால் உங்களில் அர்த்த சரீரம் பெற்ற நானாகிலும் போய் காப்பாற்றி வருகிறேன். சீக்கிரம் சொல்லுங்கள். இதோ போறேன் சொல்லும்.

பரமசிவன் : அடி மாயை, உன் வேகத்தைத் தணி, அடி நில். இது என்ன முன் யுகங்களைப்போல் நினைக்கிறாயா. நீ என்னை வெல்வதாய் நினைத்து பூலோகத்து அரசனுக்குப் பெண்ணாய் பிறந்தும் நான் அல்லமனைப் போல் வடிவங் கொண்டு மத்தளகாரனாய் உன் நாட்டியத்தைத் தோல்வியடையச் செய்தேனே. அது வரையிலும் பூலோகத்தார் உன்னை இன்னாளென்று தெரிந்து கொள்ளாமற் போனார்களே. அதுபோல் நினைத்தாயா? நில் இப்போதுள்ளவர்கள் அப்படியல்ல. எல்லோரும் கல்வி தேர்ச்சியடைந்து, பக்தி செய்து ஞானத்தை யடைந்து இருக்கறிார்கள். பூலோகத்தில் வாசித்தவர்கள் எங்கேயோ ஒருத்தரிருப்-பார்கள். இப்போது ஊர் முழுவதும் வாசித்தவர்களே. ஆனதினால் முன்னே யோகிகள் என்றும், அல்லாதவர்கள் என்றும் உனக்குத் தெரியும். இப்போது பிறப்பு, இறப்பு, அதிகமாயிருந்த போதிலும் நமக்குத் தெரியாமலே ராசயோகிகள் அநேகம்பேர் இருக்கிறார்கள் சாக்கிரதை. உன் மாயாசக்தியான காளிரூபங்கொண்டு பூலோகம் போவாயாகில் உன் வேகத்தை-யடக்கி அங்கேயே சபித்திடுவார்கள்

அல்லது என்னைக்கோருவார்கள். அப்போது பக்தர்களுக்கிரங்கி நீ பார்வதி என்றும் பாராமல் பாதாள லோகம் போம்படி அமிழ்த்திடுவேன். ஆனதினால் எனக்கு பக்தியே பிரதானம். அவர்களுக்குத்தான் நான் அடிமை. இதோ, நான் அந்தப் பிள்ளையின் பக்திக்கிரங்கிப் போகிறேன். நீ என் பின்னோடுவா. வேறே பெரியதனம் பண்ணாதே. இது கலியுகமானபடியால் மாயை என்னும் படியான உன்னை நான் அடக்கி ஆளத்தான் வேண்டும். பின்னோடு வா, முன் செல்ல உனக்கு ஞாயமில்லை. அடங்கிவா, அடங்கிவா. நீ எப்போதும் நல்வினைக்கே நில். தீவினைக்குப் போகாதே. அப்படி தீவினை உற்றவர்களை சமயமறிந்து நான் தண்டிக்குறேன். சாக்கிரதை, இதுவே கட்டளை.

(செகதீசனான பரமசிவன் பிரசன்னம்)

பரமசிவன்: அடே துஷ்டா? என்ன காரியம் செய்தாய். பொரு, பொரு, செய்யாதே. நிறுத்தாவிடில் சபிப்போம். மைந்தா, வா, இப்படி, சுகப்படு. அம்மணி நமது சக்தியைக் குறித்து நீ நோற்ற நோன்புக்கும், ஏ பிராமணரே, நீ

நமது தேவர்களைக் குறித்து செய்தயாகத்திற்கும் மெச்சினோம். நாம் மேற்படி யாகத்தைத் தேவர்கள் மூல்யமாக ஆவாகனம் செய்து கொண்டோம்.

பார்வதி : அம்மணி, நீ நோற்ற நோன்பில் அர்ச்சிக்கும் படியான புஷ்பத்தை இதோ, மாலையாக தரித்தோம், ஸ்தோத்திரத்தை ஆபரணமாகப் பூண்டோம், இனி உமக்கு யாதொரு குறைவுமில்லை இரட்சித்தோம்.

பரமசிவன்: ஏ, பிள்ளாய், உனக்கு என்னவரம் வேண்டும் கேள். நாம் அளிக்கிறோம்.

பி.லிங்கேசன்: எப்போது தங்களைக் கண்டு விட்டேனோ எனக்கு என்னவரம் வேண்டும். தங்களுடைய பாதாரவிந்தமே சரி, அதுதான் சிரேஷ்டம்.

பரமசிவன்: அப்பா, நீ பூர்வ சென்மத்தில் பிரம்மஸ் தராசாவாயிருந்து கோயிலுக்குப் போய் பக்தியில்லாமல், சிவலிங்கத்தைப் பின்னப்படுத்தியும் அதனுடைய அடியிலுள்ள திரவியங்களை எடுக்கும் பொருட்டு சிவலிங்கத்தைக் கேள்வி முறையில்லாம்ல் அப்புறப்படுத்தி எடுத்ததினாலும் நாம் அந்த திரவியத்தின் மேலேயே ஆரோகணித்து உன்னுடைய உதிரத்தைத்

தீர்த்தமாடினோம். ஆனதினால் நீ இன்று முதற்கொண்டு நீ இந்த இராஜ்யத்தை மனுநீதி தவறாமல் பழைய மந்திரியைக் கொண்டு அரசாண்டு பக்தி பூர்வமாயிருந்து மோட்ச சாம்ராஜ்யத்தை அடைவாய். ஓ பிராமணரே, அம்மணி, நீர் பூர்வத்தில் இந்த பிள்ளைக்குத் தாய் தகப்பனாயிருந்து சிறு வயதிலேயே சன்மார்கத்தைப் போதிக்காததினால் இப்போது இந்த கஷ்டத்தை அனுபவிக்க வைத்தோம். இன்று முதற்கொண்டு நீரும் பிள்ளையுடைய ஆதரவிலிருந்து பக்தியைச் செய்து நமது பாதாரவிந்தத்தையடைவீராக. அடே துஷ்டா, தனேஸ்வரா, இப்போது உன்னைச் சபிக்கப்போகிறோம். என்ன சொல்லுகிறாய்.

தனேஸ்வரன் :

தேவாரம்

*பூவார்மலர் கொண்டடியார் தொழுவார் புகழ்வார்*
*வானோர்கள்*
*மூவார்பு ரங்களெரித் தவன்று மூவர்க்க ருள்செய்தார்*
*தூமாமழை நின்றதிர வெருவித் தொறுவின் நிரையோடு*
*ஆமாம் பிணைவந் தணையுஞ் சாரல்அண்ணா*
*மலையாரே.*

## தேவாரம்

பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை
யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே.

## திருத்தாண்டகம்

சிவனாகித் திசைமுகனாய்த் திருமா லாகிச்
செழுஞ் சுடராய்த் தீயாகிநீரு மாகிப்
புவனாகிப் புவனாங் களனைத்து மாகிப்
பொன்னாகி மணியாகி முத்து மாகிப்
பவனாகிப் பவனங்கள னைத்து மாகிப்
பசுவேறித் திரிவானோர் பவனாய் நின்ற
தவனாய தலையாலங் காடன் றன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே.

சுவாமி என்ன செய்யப்போகிறேன்.
அப்படிசெய்யப்படாது.

## பிடித்தபத்து

அம்மையே யப்பா வொப்பிலா மணியே
யன்பினில் விளைந்த வாரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்

*செம்மையே யாய சிவப தமளித்த*
*செல்வமே சிவபெரு மானே*
*யிம்மை யேயுன்னைச் சிக்கென பிடித்தே*
*னெங்கெழுந் தருளுவ தினியே.*

என்னை மன்னியும் சுவாமி. நானுய்யும் படியான வழியைச் சொல்லும். தாங்களே கதி. ஏ, பரஞ்சோதி.

பரமசிவன்: அடே, தனேஸ்வரா, நம்மை நீ வற்புறுத்துவதினாலும், மேலும் இது நம்மாலே குபேரனுடையவேண்டு கோளுக்கிரங்கி நடத்தினத் திருவிளையாடல் ஆனதினாலும் உன்னை மன்னித்தோம். இருந்தாலும் உன் பிரம்ம அத்தி உன்னை முற்றிலும் தொடராமற் போனாலும் நீ செய்த கர்மத்துக்குத் தகுந்த சிட்சையை விதிப்போம். அதாவது நீ, நீதி சொன்ன மந்திரியைப் பரதவிக்கவிட்டதும், சிவலிங்க மாச்சே என்று கருதாததும் பிரம்ம அத்தியாச்சே என்று நினையாது அத்தியைச் செய்யத் துணிந்ததும் இந்த மூன்றிற்கும் நீ காட்டிற்குச் சென்று தீவிரமான தபசுசெய்து பிரம்ம ஹத்தியெத்தனத்தை யொழித்துப் பூர்வகர்மத்தை நீத்து பின்னால் தேசோன்மயத்தில் கலப்பாய். போ, இப்போதே, போ.

தனேஸ்வரன்: சுவாமின், நான் செய்த பாக்கியமே பாக்கியம். என்னை இவ்வளவோடு மன்னித்தீரே போதும். இதோ இந்த இராஜ்யத்தைத் தமது அன்பனாகிய இந்தப் பிள்ளைக்குக் கொடுத்து விட்டேன். அப்பா, பழைய மந்திரியைக் கூப்பிட்டு வைத்துக்கொள். இதோ, இந்த சங்கரன் முன்னிலையிலேயே முடி சூட்டினேன். செய, செய, இந்திராதி தேவர்கள் உள்ளவரைக்கும் பஞ்சபூதங்களுள்ள வரைக்கும் பாரிசாதமுள்ள வரைக்கும் சிவ, சிவ, நான் போய் வருகிறேன்.

(பரமசிவன் மறைதல், தேவர்கள் புஷ்பமாரிபொழிதல் அசரீரி) சுகீபவா! சுகீபவா! இராசராஜேஸ்வரா, சுகீபவா. எல்லோரும் இன்று முதற்கொண்டு பேராசையென்னும் படியானது பொதுவாயிருப்பதால், நல்ல விஷயத்திலேயும் கெட்ட விஷயத்திலேயும் அது உற்பவித்து உம்மைக்கோரி வரும்போது உம்மிடத்தில் இருக்கும் படியான நிதானம் என்னும் தானத்தைக் கொடுத்து உபசரிக்க வேண்டும். அப்போது அது நல்ல மார்க்கத்திலேயே கொண்டுபோய்விடும். அதுவுந்தவிர லோக

வியாபாரத்திலும் இராசாங்க அந்தஸ்திலும் மற்ற குருமுகூர்த்தமாயிருந்து வுபதேசிப் பதிலும் ஒரு வெண்மை பொருந்திய கற்பூரக் குவியலைக் கொட்டி அந்த கற்பூரத்தில் தீபிடிக்காவண்ணம் ஒரு சோதியான தீபத்தை வைத்தால் எப்படி பிரகாசிக்குமோ, அப்படி, சனங்களையும், பிறவுயிர்களையும் காத்துப் பிரகாசித்துக் கொண்டிருக்கவேண்டும் ஒவ்வொருவரும். காலதாமதமாகிறது. ஆசீர்வதித்தோம். ஆசீர்வதித்தோம்.

திருச்சிற்றம்பலம்

மங்களம்! மங்களம்! மங்களம்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

இப்பவும் இதை நாம் மேற்படி பாகவதரவர்கள் காலட்சேபம் செய்யக் கேட்டு ஒரு நாடகமாக எழுதினோம். இதில் சொற்குற்றம் மற்ற எவ்வித குற்றங்களிருந்தாலும் மன்னிக்கவும். மேலும் நாடகத்துக்குத் தகுந்த செய்யுட்கள் இது அல்ல என்று ஏற்படும் பட்சத்தில் அதற்கு ஈடாக வேறு அமைத்துக் கொள்ளலாம். போதாததா யிருந்தாலும் சேர்த்துக் கொள்ளலாம்.

மேலும் இதில் பக்தியே பிரதானமாயிருப்பதால் அதற்குத் தகுந்த கீர்த்தனைகளும் அமைத்துப்பாடி ஆனந்தத்தை உண்டாக்கலாம். இதை நடத்துபவர்கள் இதை சுருக்கவேண்டுமென்கிற கருத்து கொண்டு பிராமணர் புறப்படுதலிலிருந்து செய்தாலும் செய்யலாம்.

பிராமணஸ்திரீயைக் கோயலில் அரசன் காண்பதிலிருந்து சுரோத்திரிய அதிகாரத்தைக் கொஞ்சம் விஸ்தீரணப் படுத்தி செய்தாலும் செய்யலாம். எப்படி இஷ்டமோ அப்படி செய்யலாம். இது சிறுத் தொண்ட நாயானார் சரித்திரம்போல, இது ஒரு பக்திரசமுள்ள சரித்திரமென்றும் காலக்ஷேபம் செய்தவர் இதைக் கலியுகத்திற்கு ஏற்ற சரித்திரமென்று சொன்னதினாலும் அவர் காலஞ் சென்று விட்ட தினாலும் இதை அவர் பேர் விளங்க முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணத்தில் எழுதினோம். சிற்றறிவுடையேனை ஆசீர்வதிப்பீர்களென்றும் நம்புகிறோம்.

முற்றும்.

## அருஞ்சொற்பொருள்கள்

| | | |
|---|---|---|
| 1. | அனுஷ்டித்தல் | - பின்பற்றல் |
| 2. | கிஞ்சித்து | - சிறிது |
| 3. | சிருஷ்டி | - உற்பத்தி |
| 4. | சிரோஷ்டம் | - சிறந்தது |
| 5. | அநுபோகம் | - ஆடம்பரம் |
| 6. | கலிக்யானம் | - புத்துலக அறிவு |
| 7. | ஆவாகனம் | - உட்செலுத்துதல் |
| 8. | குருமுகூர்த்தம் | - நல்ல நேரம் |
| 9. | சோமவாரம் | - திங்கள் கிழமை |
| 10. | மாயாசம்பந்தம் | - பொய்யுலகம் |
| 11. | பாபகிருத்தியங்கள் | - பாவச்செயல்கள் |
| 12. | ஊர்ச்சிதம் | - உறுதிப்படுத்துதல் |
| 13. | விஸ்வகர்மம் | - உலகச் செயல் |
| 14. | ஏகாங்கி | - தனிமையாக இருத்தல் |
| 15. | சேஷி | - மீதமுள்ள |
| 16. | திருஷ்டாந்திரம் | - எடுத்துக்காட்டு |
| 17. | சவிஸ்தாரங்கள் | - விரிவுரைகள் |
| 18. | ரேழி | - வராண்டா |
| 19. | சூத்திரத்தாரி | - இயக்குகின்றவன் (கடவுள்) |
| 20. | தஸ்தாவேசு | - ஆவணங்கள் |

| | | |
|---|---|---|
| 21. | பிதுரார்ஜிதம் | - தகப்பனார் சொத்து |
| 22. | தேசோன்மயம் | - இருப்பிடம் |
| 23. | பிரதிஷ்டை | - நிறுமானித்தல் |
| 24. | ஆக்கியாபித்தல் | - ஆணையிடல் / கட்டளையிடல் |
| 25. | பூர்வகியானம் | - முன்னறிவு |
| 26. | பதார்த்தம் | - பொருட்கள் |
| 27. | பின்னப்படுத்துதல் | - களைத்தல் |
| 28. | கிட்சை | - கல்வி |
| 29. | பர்த்தா | - கணவன் |

## பாடற்முதற் குறிப்பு அகராதி அகரவரிசை


| | | பக்க எண் |
|---|---|---|
| 1. | அம்மையே யப்பா | 125 |
| 2. | அறிவினை யாதெனிற் | 85 |
| 3. | இன்று வருமோ | 38 |
| 4. | ஊரும் சதமல்ல | 87 |
| 5. | என்செய் வாலாதியா | 114 |
| 6. | கரவாடும் வன்னெஞ்சர்க் | 52 |
| 7. | கற்றாங் கெரியோம் | 31 |
| 8. | கற்றுணர்ந்த | 86 |
| 9. | காட்டூர் கடலே | 56 |
| 10. | காதலாகிக் கசிந்து | 89 |
| 11. | கொந்தவேல் கொண்டொரு | 75 |
| 12. | சிவனாகித் திசைமுகனாய் | 125 |
| 13. | சுத்தமும் அசுத்தமும் | 113 |
| 14. | சோதியே சுடரே | 54 |
| 15. | தந்தை தாயுநீ | 72 |
| 16. | தலையே நீவணங்காய் | 63 |
| 17. | திருநாமம் | 35 |
| 18. | துஞ்சலுந் துஞ்சலிலாத | 89 |

| | | |
|---|---|---|
| 19. | நல்லாரினக்கமும் | 54 |
| 20. | நன்மையும் தீமையும் | 45 |
| 21. | பவனமாய் சோடையாய் | 75 |
| 22. | பாராயோ என்னைமுகம் | 58 |
| 23. | பித்தாபிறை சூடிபெரு | 53 |
| 24. | பூவார்மலர் கொண்டியாங் | 124 |
| 25. | பொன்னார் மேனியனே | 125 |
| 26. | மருவார்க் கொன்றை | 96 |
| 27. | மற்றுபற் றெக்கின்றி | 56 |
| 28. | மாதர் பிறைக்கண்ணி | 57 |
| 29. | மாதர் மடப்பிடியு | 106 |
| 30. | முத்திநெறி யறியாத | 38 |